Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 மார்கழி 26 சனிக்கிழமை (10.01.2015) பக்கங்கள் 20 ஓசை – 102

# பதவியேற்றார் மைத்திரி



(கொழும்பு)

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 6 ஆவது ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன நேற்று பதவியேற்று சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.**

**இப்பதவியேற்பு வைபவம் மாலை 6.00 மணியளவில் சுதந்திர சதுக்கத்தில் கோலாகலமான முறையில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் மகாசங்கத்தினர், அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முப்படைகள், பொதுமக்கள், உட்பட பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.**

குதிரைப்படையினரின் மரியாதையோடு சுதந்திர சதுக்கத்தினுள் அழைத்து வரப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மலர்மாலை அணிவிக்கப்பட்டு வாத்திய இசைக்கருவிகளின் மரியாதையோடு அழைத்து வரப்பட்டார்.

சுதந்திர சதுக்கத்திலுள்ள புத்தர் சிலைக்கு மலரஞ்சலி செலுத்திய ஜனாதிபதி, உயர் நீதியரசர் கே.சிறிபவன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

மேலும் இவ்வைபவத்தின் மற்றுமொரு விசேட அம்சமாக புதிய ஜனாதிபதி முன்னிலையில் இலங்கையின் ஜனநாயக சோசலிச குடியரசின் புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்கவும் சத்தியப்பிரமாணம் செய்து

19 ஆம் பக்கம் பார்க்க

## பிரதமராக ரணில்



## வீதி விபத்தில் மூவர் பலி

### மன்னாரில் சோகம்

(மன்னார்)

மன்னார் பிரதான பாலத்தில் இடம்பெற்ற விபத்தின் காரணமாக மூவர் பரிதாபமாக உயிரிழந்திருக்கின்றனர்.

மன்னார் பிரதான பாலத்தில் நேற்று பிற்பகல் சுமார் 2.45 மணியளவில் இடம் பெற்ற மேற்படி விபத்தில் மன்னார் பகுதியைச் சேர்ந்த தந்தையும் மகனும் ஸ்தலத்தில் உயிரிழந்திருக்கின்றனர்.

மன்னார் அரச போக்குவரத்துச் சேவைக்கு சொந்தமான பேருந்தில் மோதிய மோட்டார் சைக்கிள் மேற்படி விபத்திற்குள்ளாகியிருக்கின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க

## மக்களின் உணர்வுகளை மதிக்கிறோம்



நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மாற்றத்தை விரும்பி வாக்களித்த சகல மக்களின் உணர்வுகளையும் நாம் மதிக்கின்றோம் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஊடகங்களுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில், அரசியல் சூழலில் என்றுமே மாற்றங்கள் நிகழவேண்டும் என விரும்புவது மக்களின் இயல்பான மன உணர்வே.

அந்த வகையில் இரு வேறு வழிமுறைகளில் எமது மக்கள் மாற்றங்கள் நிகழவேண்டும் என்ற நம்பிக்கையோடு தேர்தலில் வாக்களித்திருக்கிறார்கள்.

நீடித்த ஆட்சியின் ஊடாகவே மாற்றங்களை உருவாக்கி எமது இலக்கை எட்ட முடியும் என்ற நம்பிக்கையோடு கடந்த கால தேர்தல்களை விடவும் எமது

19 ஆம் பக்கம் பார்க்க

## தேசிய அரசில் இணைய உத்தேசம் இல்லை

### ஜே.வி.பி. சொல்கிறது

(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய அரசாங்கத்தில் இணைந்துகொள்வதா, அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொள்வதா என்பது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## அழைப்பு வந்தால் பரிசீலிப்போம்



(கொழும்பு)

தாம் வெற்றிபெற்றால் தேசிய அரசு அமைக்கப்படுமென ஜனாதிபதியாகப் பதவியேற்றிருக்கும் மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே அறிவித்துள்ள போதிலும் அது குறித்து எத்தகைய கருத்தும் எமக்குத் தெரியப்படுத்தப்படவில்லை. ஆனால் அது போன்ற எத்தகைய அழைப்புக்கள் வந்தாலும் அவை குறித்தெல்லாம் நாம் பரிசீலிப்போம்.

இவ்வாறு தகவல் வெளியிட்டார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்.


இந்தத் தேர்தல் முடிவு குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு,

மைத்திரிபால சிறிசேனவின் தலைமை மீது மக்கள் அதிக எதிர்பார்ப்புகளை முன்வைத்து தமது முடிவைத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் உறுதியாகவும் கூறியிருக்கின்றார்கள்.

நாடு பழைய

19 ஆம் பக்கம் பார்க்க

## மோடி வாழ்த்து



நேற்று ஜனாதிபதியாக பதவியேற்ற மைத்திரிபால சிறிசேனவிற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

தொலைபேசியினூடாக அழைத்தே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.


மேலும் இந்தியப் பிரதமர் தனது டுவிட்டரில் இது பற்றி குறிப்பிட்டுள்ளதாவது,

நான் தொலைபேசியில் மைத்திரிபால சிறிசேனவிற்கு வாழ்த்து தெரிவித்தேன். அமைதியான ஜனநாயக தேர்தலை நடத்தி முடித்த `இலங்கை மக்களுக்கும் வாழ்த்து தெரிவித்தேன்.

ஒரு நெருங்கிய

19 ஆம் பக்கம் பார்க்க

## இணைந்து பணியாற்ற தயார்



(கொழும்பு)

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து பணியாற்ற தயாராகவிருப்பதாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி குறிப்பிட்டுள்ளார்.

மேலும் முடிவுகளை ஏற்று வெளியேறிய மகிந்த ராஜபக்ஷ குறித்தும் அவர் பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

இம்முறை

19 ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் முடிவுகள் ஒரே பார்வையில்

| வேட்பாளர் பெயர் | பெற்றுக்கொண்ட வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரிபால சிறிசேன | 6,217,162 | 51.28% |
| மகிந்த ராஜபக்ஷ | 5,768,090 | 47.58% |
| ஏனையவர்கள் | 138,201 | 1.14% |
| செல்லுபடியான வாக்குகள் | 12,123,452 | 98.85% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 140,925 | 1.15% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 12,264,377 | 81.52% |
| பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்கள் | 15,044,490 | |

# கணேசமூர்த்தி ஓய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த கணேசமூர்த்தி நேற்று முன்தினம் முதல் தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றுள்ளார்.

இப்பதவிக்கு பாலசுப்பிரமணியம் ரமேஸ்கண்ணா நேற்று முதல் நியமிக்கப்பட்டு பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்.

இந்த நியமனத்தை கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சு வழங்கியுள்ளது. (25)

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | சனிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஒளிமயமான வாழ்வு |
| Am 07.00 | Morning Songs |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | ஆரோகனம் |
| Am 09.30 | My Styl |
| Am 09.55 | காலை செய்தி |
| Am 10.00 | ஆரோக்கியமான வாழ்வு |
| Am 11.00 | மக்கள் முகம் |
| PM 11.30 | I T .Com |
| PM 12.00 | காதல் கீதங்கள் |
| PM 12.30 | சிரிக்க சிரிக்க |
| PM 01.00 | மதிய செய்தி |
| PM 01.30 | திரைப்படம் |
| PM 03.55 | மாலை செய்தி |
| PM 04.00 | சிரிக்க சிரிக்க |
| PM 05.00 | அதிர்வுகள் |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தெரிந்தல் சொல்லுங்கல் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.30 | இதய ஊஞ்சல் |
| PM 09.00 | ஆங்கில திரைப்படம் தமிழாக்கம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# மக்கள் விரும்பிய மாற்றத்தை பயனுள்ளதாக மாற்றுங்கள்

## நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(கிளிநொச்சி)

மக்கள் மாற்றத்தை விரும்பி வாக்களித்துள்ளனர் எனவே ஏற்பட்டுள்ள அந்த மாற்றத்தை மக்களுக்கு பயனுள்ளதாக மாற்றவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள தனது அலுவலகத்தில் ஈழமக்கள் ஜனநாயகக கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆதரவாளர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் மக்கள் அளித்துள்ள தீர்ப்பை மதிக்கின்றோம். இந்தத் தேர்தலில் மக்கள் எதனை எதிர்பார்த்து வாக்களித்தனரோ அந்த எதிர்பார்ப்புகள் உரிய தரப்புகளால் நிறைவேற்றப்பட வேண்டும்.

தேர்தலில் மக்களுக்கு முன் வைத்த கோரிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் அதற்கு நாம் எப்பொழுதும் எமது ஆதரவை வழங்குவோம்.

இதுவரை காலமும் எமது அரசியல் செயற்பாடுகள் மூலம் மக்களுக்கு நன்மை தரும் மாற்றத்திற்காக உழைத்திருக்கின்றோம்.

இந்த சந்திப்பில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை. தவநாதன் மற்றும் கரைச்சி. பளை, பூநகரி பிரதேச சபைகளின் உறுப்பினர்கள், கட்சியின் அமைப்பாளர்கள், செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விசேட விரிவுரையுடன்

# நல்லூரில் யோகா பயிற்சி நாளை அறிமுக நிகழ்வு

யாழ்.யோகஅரங்கத்தினர் நல்லூர்த் தேரடி அருகே அறுபத்து மூன்று நாயன்மார் குரு பூசை மடத்தில் புதிய யோகா பயிற்சி நெறிகளை ஆரம்பிக்கின்றனர்.

இதற்கான அறிமுக நிகழ்வு நாளை மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இந்நிகழ்வில், யாழ்.மருத்துவ பீடத்தைச் சேர்ந்த திருமதி சாவித்திரி ரவிச்சந்திரன் 'யோகா பயிற்சி நுட்பங்கள்' எனும் தொனிப் பொருளில் விசேட விரிவுரையை வழங்குவார்.

இவ் யோகா பயிற்சி நெறியானது காலை 6.00 - 7.00 மணிவரையும், மாலை 4.30 - 5.30 மணிவரையும் இரு பிரிவுகளாக இரண்டு மாதங்கள் தினமும் நடைபெறும்.

வைத்தியர்கள் மற்றும் யோகா நிபுணர்களால் இனங்காணப்பட்ட சிறப்புக்குரிய ஆசனம் பிராணயாமம், தியானம் மற்றும் சாந்த வழிமுறைப் பயிற்சிகள் அனுபவமுள்ள ஆசானால் பதஞ்சலி யோக முறையில் நுட்பமாக பயிற்சி வழங்கப்படுவதுடன். பெண்களுக்கான மேலதிக யோகா பயிற்சிகள் பெண் ஆசிரியரினால் வழங்கப்படும்.

சான்றிதழ் மற்றும் கையேடுகளும் கொடுக்கப்படும். ஆர்வமுடைய அனைவரும் இணைந்து பயன் பெறமுடியுமென்றும் பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர்கள் அறிமுக நிகழ்வில் அவசியம் கலந்து கொள்ள வேண்டும் என்றும் யாழ்.யோகா அரங்கத்தினர் அறிவித்துள்ளனர்.


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1125

திகதி 08.01.2015

வெற்றி எண்கள்: 10 20 35 51 ஆங்கில எழுத்து: R

ஜக்பொட் பரிசு ரூ. 1,03,07,020/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,03,07,020/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5 | 50,000/= | ரூ. 2,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 157 | 1,000/= | ரூ. 1,57,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 306 | 1,000/= | ரூ. 3,06,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 7254 | 60/= | ரூ. 4,35,240/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 3821 | 40/= | ரூ. 1,52,840/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 96322 | 20/= | ரூ. 19,26,440/= |
| ஆங்கில எழுத்து | 13972 | 20/= | ரூ. 2,79,440/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,506,960/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா 10,495,000/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2015.01.12 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3981)


# முதியோர் இல்லத்தில் வாழும் முதியவர்களும் வாக்களித்தனர்


கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது 144 பேர் வாக்களிக்கும் தகுதியைப் பெற்றிருந்தனர். இவர்களுக்கான வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

இவர்கள் அனைவரும் இல்ல வாகனத்தில் ஏற்றப்பட்டு கைதடியில் உள்ள வாக்குச் சாவடிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் தமக்கு விரும்பிய ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களித்தனர்.

முதியவர்கள் வாக்களிப்பதற்குரிய ஏற்பாடுகளை இல்ல அத்தியட்சகர் முதியோர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுத்திருந்தார்.

இம் முதியவர்கள் வாக்களிப்பில் மிகவும் ஆர்வம் காட்டியதுடன், ஜனாதிபதி வேட்பாளர்களில் எவர் வெற்றி பெற்றுள்ளார் என்பதை அறிவதிலும் அக்கறையுள்ள வர்களாக இருந்தனர்.

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கி வாழ்வபவர்களில 39 பேர் மன நலம் குன்றியவர்களாவர். (137)



காரைநகர் கிழவன் காடு கலாமன்றத்தில் அண்மையில் இடம்பெற்ற திருவெம்பாவை உற்சவ கால தெய்வீக கலைநிகழ்வில் இலண்டனில் இருந்து வருகை தந்த ரெஸ்மி சிவதீசனின் வீணை இசை நிகழ்வைக் காணலாம். (50)

# மானிப்பாய் மருதடிவிநாயகர் ஆலய இராஜகோபுர மகாகும்பாபிஷேகம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய ஆவர்த்தனப் பிரதிஷ்டா நவகுண்டபஷ இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.45 மணி முதல் 10.45 மணிவரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 06.40 மணிக்கு விநாயக வழிபாடு மற்றும் ஆரம்பகிரியைகள் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 31 ஆம் திகதி காலை 7 மணி முதல் 1 ஆம் திகதி மாலை 3 மணிவரை அடியார்களின் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதுடன் தொடர்ந்து பண்ணசை திருமுறை, திருமுறை பாராயணம், விநாயகர் வழிபாடு, யாகபூசை என்பன இடம்பெற்று மறுநாள் கும்பாபிஷேகம் சிறப்புற இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து அன்றைய தினம் மாலை 04.30 மணிக்கு பூசை இடம்பெற்று 5 மணிக்கு வசந்த மண்டபபூசையைத் தொடர்ந்து சாவாலங்கார பூஜிதராக மருதடி விநாயகர் பூந்தண்டிகையில் திருவீதியுலா வரும் காட்சி இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரியைகள் இணுவில் தர்ம சாஸ்தா குருகுல முதல்வர் சிவஸ்ரீ தா.மஹாதேவக்குருக்களின் நல்லாசியுடன் பிரதிஷ்ட பிரதம குரு அராலியூர் சிவஸ்ரீ சிவஸ்சாதிக் குருக்கள் பரமேஸ்வர ஜெயகுமாரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளதுடன் இதில் 50 இற்கும் மேற்பட்ட அந்தணசிவாச்சாரியார்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

## சிறுவர் பூங்கா நிர்மாணம்

முல்லைத்தீவு உண்ணாப்புலவு பகுதியில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 8.5 மில்லியன் ரூபா செலவில் சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது. முல்லைத தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கீழ் உண்ணாப்புலவு கிராமத்தில் நெல்சிப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பூங்கா கடந்த 2013 ஆம் ஆண்டு அமைக்கப்படவிருந்த நிலையில தாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில் கடந்த ஆண்டு இதன் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வேலைகள் நிறைவு பெற்றுள்ளன. நிர்மாணிக்கப்பட்ட குறித்த சிறுவர் பூங்கா சகல வசதிகளும் கொண்ட பூங்காவாக அமைக்கப்பட்டுள்ளது.

# நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படவில்லை

# சிகிச்சை பெறுவதில் நோயாளர்கள் சிரமம்

(வவுனியா)

வவுனியா மன்னார் மாவட்ட எல்லையில் உள்ள இரணை இலுப்பைக் குளப்பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்திற்கு நிரந்தர வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமையால் வைத்திய தேவைகளைப் பெற்றுக்கொள்வதில் இப்பகுதி மக்கள் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கின்றனர்.

மடுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 23 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியில் இவ் வைத்தியசாலை அமைந்துள்ள நிலையில் இவ்வாறு வைத்தியர் ஒருவர் நியமிக்கப்படாமையால் இப்பகுதி மக்கள் வவுனியா பொதுவைத்தியசாலைக்கும், பூவரசன் குளம் வைத்தியசாலைக்கும் செல்லவேண்டிய நிலை காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக இவ்வைத்திய நிலையத்தில் வைத்தியர் நியமிக்கப்படாமையால் அவசர நோயாளர்கள் மிகுந்த கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் பணத்தை செலவு செய்தே தூர இடங்களிலுள்ள வைத்தியசாலைக்கு செல்வதாகவும் நோயாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை இவ்வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டியும் இல்லாத நிலையில் கர்ப்பிணித் தாய்மார், குழந்தைகள் அவசர் நோய் நிமித்தம் செல்வதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே நோயாளர்களின் நலன்கருதி இவ்வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமித்து அம்புலன்ஸ் வண்டியையும் வழங்க உரிய அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சுவாமி விவேகானந்தரின் 153 ஆவது ஜெயந்தி விழா

யாழ்.இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தின் சுவாமி விவேகானந்தரின் 153 ஆவது ஜெயந்திதின விழா எதிர்வரும் 12 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

முற்பகல் 10 மணிக்கு ஜீவ சிவ சேவை தெல்லிப் பளை புற்றுநோயாளர் வைத்தியசாலையில் சி.சிவமோகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி (திருமதி) எஸ்.ஆர்.யூட் கலந்து கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள கலை நிகழ்வு உரும்பிராய் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சரின் செயலாளர் சி.திருவாகரன், கலந்து கொள்ளவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி த.ஜெயசீலன் கலந்து கொள்ளவுள்ளார்.

# நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பிரதேச அளவீட்டு அலகுகள் மற்றும் நியமங்கள் சேவை அலுவலகத்தின் ஒழுங்குபடுத்தலில் நிறுத்தல் அளவைகள் கருவிகளுக்கு முத்திரையிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 26, 27, 29 ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை இச் செயற்பாடு இடம்பெறவுள்ளதுடன் இந்நாட்களில் வர்த்தகர்கள் தமது நிறுத்தல். அளவைக் கருவிகளுக்கு அலுவலகத்திற்கு வருகை தந்து முத் திரையிட்டுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.


# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் 2 ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப்பரீட்சை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் எதிர்வரும ஏப்ரல் மாதம் 12 மாவட்டங்களில் நடாத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளோர் எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் திணைக்களத்தினூடாக தமது விண்ணப்பங்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் கிளை இலங்கை பரீட்சைத் திணைக்களம் கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.



காரைநகர் துறைமுக சித்திர கூட சித்திவிநாயகர் ஆலயம் புதிதாக கருங்கல்லினால் அமைக்கப்பட்டுவருகிறது. பாரிய இயந்திரங்களின் உதவியுடன் நிர்மாணப்பணிகள் இடம்பெற்று வருவதைக் காணலாம். (50)

# மின்விளக்குகள் ஒளிராமையால் இருளில் மூழ்கியுள்ள வீதிகள்

(அச்சுவேலி)

அச்சுவேலி பகுதியில் உள்ள சில கிராம வீதிகளுக்கு மின் விளக்குகள் இன்மையால் அப் பகுதி வீதிகள் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன.

குறிப்பாக பத்தமேனி பகுதியில் உள்ள சில வீதிகள் மற்றும் கதிரிப்பாய் சந்தியில் இருந்து பிரிந்து செல்லும் உள்ளக வீதிகள் சிலவும் அச்சுவேலி சந்நிதி வீதியிலும் தம்பாலையில் உள்ள சில வீதிகளும் அத்துடன் விமானநிலைய வீதியின் பகுதிகள், வளலாய் சல்லி வீதி, வளலாய் சந்தியில் இருந்து பிரிந்து செல்லும் வீதிகள் ஆகியவற்றுக்கு வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் இந்த வீதிகளினூடாக பயணத்தை மேற்கொள்ளும் பயணிகள் மற்றும் அதிகாலை வேளைகளில் தமது தோட்ட நிலங்களுக்குச் செல்வோர் எனப் பலர் இதனால் பெரும இடையூறுகளை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே குறித்த வீதிகளுக்கு வீதி விளக்குகளை சம்பந்தப்பட்ட தரப்பினர் பொருத்தி உதவுமாறு பயணிகள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர்.(85)

## முரசின் இன்றைய பலன்

(10.01.2015 சனிக்கிழமை)

ஜய வருஷம் மார்கழி மாதம் 25 ஆம் திகதி.
பஞ்சமி / சித்தம்.
பூர நட்சத்திரம் முன்னிரவு 09.31 வரை. பின் உத்தரம்.
இராகு காலம 09.33 - 11.03 வரை. சுபநேரம 03.33 - 05.03 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
பாடசாலைகளில் அனுமதி பெற கல்வி அதிகாரிகளின் தயவினை நாடபணிமனை செல்லல்.

**ரிஷபம்**
ஓய்வு பெற்ற பின்னரும் மீள் நியமனம் பெறும் கைங்கரியத்தில் ஈடுபட முனைதல்.

**மிதுனம்**
தற்காலிக பணி நிரந்தரமாக்கப்பட்ட செய்தி அறிந்து ஆனந்தப்படல்.

**கடகம்**
பெற்றோருக்கு ஏற்பட்டிருக்கும் தேகநலம் குறைபாட்டினால் தற்காலிகமாக பயணத்தைக்கைவிடல்.

**சிம்மம்**
எதிர்பாராது ஏற்பட்ட சுபகாரியம் கொண்டாட பணத்திற்கு திண்டாட்டம் ஏற்படல்.

**கன்னி**
"ஈகோ" மனப்பாங்கினைக் கைவிட்டு சக ஊழியர்களுடன் இணக்கமேற்பட்டு பணிநிறைவடைதல்.

**துலாம்**
அரசாங்க மொழி தெரிந்தமையினால் பிரச்சினை சுமுக முடிவினைக் கொண்டுவருதல்.

**விருச்சிகம்**
நாட்டின் எல்லைகளை ஐரோப்பியக் கண்டத்தில் கடக்க முற்படுகையில் அபாயம் ஏற்படலாம்.

**தனுசு**
ஆவணங்களைச் சரிபார்த்த பின்னர் பயண முயற்சியை மேற்கொள்ள முயலுங்கள்.

**மகரம்**
பெற்றோரின் இடைவிடாத வற்புறுத்தலினால் விவாகம் செய்ய இசைதல்.

**கும்பம்**
விற்பனை செய்ய வாடிக்கையாளர்களை கூவி அழைப்பதினால் அயல் நிலையத்தாருடன் முறுகல் நிலை தக்கவைத்தல்.

**மீனம்**
பிள்ளைகளின் ஒவ்வாத நடவடிக்கைகளைக் கண்டிக்க முயன்றபோது கபேபரம் உருவதால்.

எதுவொன்று இருப்பதைவிட வித்தியாசமாக இருக்கிறதோ அதுவே முதலில் கவனிக்கப்படும். - ஸ்டாடர்

தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## என்ன செய்யப் போகிறது கூட்டமைப்பு?

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் பொது எதிரணியின் சார்பாக போட்டியிட்ட முன்னாள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டியிருக்கிறார்.

அவர் நாட்டின் ஜனாதிபதியாகவும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் நேற்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற பதவியேற்பு வைபவத்தில் சத்தியப் பிரமாணம் செய்திருக்கிறார்கள்.

இந்த நாட்டின் ஆறாவது ஜனாதிபதியைத் தேர்வு செய்வதில் சிறுபான்மையின மக்களே தீர்மானகரமாகச் செயற்பட்டிருக்கிறார்கள். சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கே அதிகமாகக் கிடைத்திருக்கின்றன.

அந்தவகையில் மைத்திரி ரணில் ஆகியோர் இணைந்து பொறுப்பேற்றிருக்கும் இந்த அரசாங்கத்தை சிறுபான்மை மக்களின் ஆதரவோடு வந்திருக்கும் அரசாங்கம் என நாம் சொல்லலாம்.

தமிழ் மக்களின் பிரதான கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் முஸ்லிம் மக்களின் பிரதான கட்சியான முஸ்லிம் காங்கிரசுக்கும் இந்த அரசாங்கத்தைக் கொண்டுவந்ததில் பெரும் பங்குண்டு.

எனவே, நீண்டகாலமாகப் புரையோடிப் போயிருக்கும் இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வைக் கண்டுகொள்வதற்கான நிலைமை உருவாகியிருக்கிறது.

இந்த இரு கட்சிகளும் வெறுமனே ஆட்சி மாற்றத்துடன் திருப்தியடைந்து ஒதுங்கிவிடாமல் தங்கள் மக்களுக்கான பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்காகத்தான் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வந்தார்கள் என்றேதான் மக்கள் நம்புகிறார்கள்.

குறிப்பா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபையை நடத்துவதற்கும் மக்களுக்கு மாகாண சபையின் மூலமான பலன்கள் கிடைக்காமல் இருப்பதற்கும் பழைய அரசாங்கம்தான் தடையாக இருந்ததாகக் கூறிவந்திருக்கிறது.

இப்போது அவர்களே கொண்டுவந்திருக்கும் அரசாங்கத்தின் மூலமாக, அந்தத் தடைகள் எதுவுமற்ற சூழ்நிலையில் மாகாண சபையின் மூலம் அதாவது அதற்கு இப்போதுள்ள அதிகாரங்களின் மூலமே மக்களுக்கு நிறையச் செய்ய முடியும்.

மக்களுக்கு செய்ய வேண்டியவற்றுக்கான கோரிக்கைகளை முன்வைத்து இந்த அரசாங்கத்திடம் இருந்தும் பெற்று செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் இனி மக்களுக்கு புறணிகளைச் சொல்லிக்கொண்டிருக்க முடியாது.

இந்த அரசாங்கமும் சரியில்லை; இவர்களிடமிருந்தும் எங்களால் தமிழ்மக்களுக்கு அபிவிருத்திகளையோ தீர்வையோ எடுத்துத் தரமுடியவில்லை என்று மீண்டும் பழைய குருடிக் கதையையே ஆரம்பிப்பார்களானால், இவர்களால் தமிழ்மக்களுக்கான தலைமைத்துவப் பொறுப்பைச் சரிவரச் செய்யமுடியவில்லை என்றே அர்த்தமாகும்.

எதிர்த்தரப்பு சரியில்லாததால் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களையே தொடர்ந்தும் தங்களுக்கான தலைமையாக தமிழ்மக்களும் எண்ணி மயங்கிக் கொண்டிருந்தால், கௌரவமான முன்னேற்றமான வாழ்க்கை இங்கு வந்துவிடப் போவதில்லை.

தமிழ்மக்களின் வாக்குப்பலத்தைப் பயன்படுத்தி ஆட்சியை மாற்றத் தெரிந்தவர்களுக்கு, அந்த ஆட்சியைப் பயன்படுத்தி தமிழ் மக்களது தேவைகளை அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கு அணுகவேண்டிய முறைகளும் தெரிந்திருக்க வேண்டும்.

அதற்குரிய விருப்பத்தை அக்கறையை இவர்கள் காட்டவேண்டும். தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக முன்வருபவர்களின் திட்டங்கள் செயற்பாடுகள் தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாகத்தான் இருக்க வேண்டுமேயொழிய, அது இயலாமற் போனதற்கு மற்றவர்களைக் காரணமாக கண்டுபிடித்துச் சொல்லிக் கொண்டிருப்பதல்ல. - ஆசிரியர்

# மாற்றத்தை விரும்பிய மக்களை யாரும் பழிவாங்கக்கூடாது

### - எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கை -

(கொழும்பு)

யாரும் யாரையும் பழிவாங்கக் கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க பொது மக்களிடம் கோரியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது ரணில் விக்ரமசிங்க இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

போரை வென்றெடுத்த ஜனாதிபதி என்ற வகையில் மகிந்த ராஜபக்ஷவை மதிக்கின்றோம். சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட பொலிஸ் மா அதிபர் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

தற்போது மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வெற்றியீட்டியுள்ளார். நேற்றுக் காலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்தேன். ஜனாதிபதி பொறுப்பினை ஒப்படைப்பதாக அவர் தெரிவித்தார்.

போரை முடிவுக்குக்கொண்டு வந்த ஜனாதிபதி என்ற ரீதியில் மகிந்த ராஜபக்ஷ வரலாற்றில் இடம்பிடிப்பார். மக்கள் மாற்றமொன்றை விரும்பியிருந்தனர். நல்லாட்சியை ஏற்படுத்த ஜனநாயகத்தை நிலைநாட்ட மாற்றமொன்று செய்யப்பட்டுள்ளது.

எவரும் சட்டத்தை கையில் எடுத்துக்கொள்ளக் கூடாது. யாரையும் யாரும் பழிவாங்க இடமளிக்க முடியாது. 100 வீதம் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோருகின்றோம் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

## பாப்பரசரின் இலங்கை விஜயம் ஐ.தே.க. முன்னின்று ஏற்பாடு

(கொழும்பு)

பாப்பரசர் பிரான்ஸிசின் இலங்கை விஜயம் தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க முன்னெடுக்கவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.தே.க.வின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கமையவே ஜோன் அமரதுங்கவுக்கு இந்த பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வியாழக் கிழமை பாப்பரசர் பிரான்ஸிஸ் இலங்கை வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிழையான எண்ணக்கரு அகற்றப்பட வேண்டும்

### கூறுகிறார் நல்லாட்சிக்கான தேசிய முன்னணித் தலைவர்

(கொழும்பு)

சிறுபான்மையினம் குறித்து தெற்கில் உள்ள பிழையான சிந்தனைகள் அகற்றப்பட்டு சிறுபான்மையினங்கள் சகல உரிமைகளும் பெற்று வாழ்வதற்கான நடவடிக்கையினை புதிய ஜனாதிபதி எடுக்க வேண்டும் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைவர் பொறியியலாளர் அப்துல் ரஹ்மான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், சிறுபான்மையினங்கள் ஏங்கிக்கொண்டிருந்த வெற்றி இந்த நாட்டில் தற்போது கிடைத்துள்ளது. சிறுபான்மையினத்தை விலக்கி வைத்து இந்த நாட்டில் எதனையும் செய்ய முடியாது என்பதை இந்தத் தேர்தல் அனைத்து தரப்பினருக்கும் உணர்த்தியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த அரசாங்கத்தில் சிறுபான்மையினத்துக்கு போதிய முக்கியத்துவம் இல்லாத காரணத்தினாலும் சிறுபான்மை சமூகத்தினை கடுமையான முறையில் புறந்தள்ளிய காரணத்தினாலும் இன்று மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் தமது பலத்தினை காட்டி மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

# சுதந்திரக் கட்சியின் தலைவராக தொடர்ந்தும் நீடிப்பேன்

### - மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு -

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக பதவியில் தொடர்ந்தும் நீடிக்கப் போவதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பதவியை விட்டு விலகிய போதிலும் கட்சியின் தலைமைப் பதவியை விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

எந்தவிதமான கலகங்களிலும் ஈடுபடாது அமைதியான முறையில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட வேண்டும்.

ஜனாதிபதி மைத்திரிபாலவின் சகலவிதமான சாதக செயற்பாடுகளுக்கும் ஆதரவளிக்கப்படும்.

எனினும், நாட்டுக்கு விரோதமான செயற்பாடுகளை விமர்சனம் செய்யத் தயங்கப் போவதில்லை என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி உரையாற்றிய போது அநேக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்ணீர் சிந்தி அழுதனர் என தெரிவிக்கப்படுகிறது.

# சுதந்திரக்கட்சி அதிகாரம் மீண்டும் சந்திரிக்காவிடம்

மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடைந்துள்ளதை அடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அதிகாரம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் கைக்கு செல்லும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன, அரசாங்கத்தில் இருந்து விலகி பொது வேட்பாளராக போட்டியிட்டதை அடுத்து அனுரபிரியதர்ஷன யாப்பா அந்தக் கட்சியின் செயலாளராக நியமிக்கப்பட்டது கட்சியின் யாப்புக்கு முரணானது எனவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் வேலைகள் காரணமாக மைத்திரிபால சிறிசேன, கட்சியின் செயலாளராக வேறு ஒருவர் நியமிக்கப்பட்டமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவில்லை.

எனினும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சட்ட ரீதியான உரிமைக்கான நடவடிக்கைகளை எடுக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் முனைப்புகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆதரவளித்தவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நாமல்

கடந்த காலங்களில் ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த கால ஜனாதிபதித் தேர்தல்களின் போதும், நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலின் போதும் மக்கள் அளித்த ஆதரவு பாராட்டுக்குரியது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பிற்கு மதிப்பளிக்கின்றோம்.

கடந்த பல ஆண்டுகளாக எமக்கு மக்கள் வழங்கி வந்த ஆதரவு பாராட்டுக்குரியது என நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் கணக்கின் ஊடாக தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தல் -2015 மாவட்ட ரீதியான முடிவுகள்

| | | |
|---|---|---|
| புதிய ஜனநாயக முன்னணி | 4,060,230 | 51.83% |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 3,674,940 | 46.92% |
| ஏனையவை | 97,872 | 1.25% |

## களுத்துறை

| | |
|---|---|
| மகிந்த | 395,890 |
| மைத்திரி | 349,404 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 751,984 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 8,381 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 760,365 |
| மொத்த வாக்குகள் | 926,346 |

## காலி

| | |
|---|---|
| மகிந்த | 377,126 |
| மைத்திரி | 293,994 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 677,811 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 6,516 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 684,327 |
| மொத்த வாக்குகள் | 850,549 |

## கொழும்பு

| | |
|---|---|
| மைத்திரி | 725,073 |
| மகிந்த | 562,614 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 1,266,085 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 15,009 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 1,281,094 |
| மொத்த வாக்குகள் | 1,572,051 |

## குருநாகல்

| | |
|---|---|
| மகிந்த | 556,868 |
| மைத்திரி | 476,602 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 1,041,624 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 9,285 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 1,050,909 |
| மொத்த வாக்குகள் | 1,333,377 |

## மாத்தறை

| | |
|---|---|
| மகிந்த | 297,823 |
| மைத்திரி | 212,435 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 491,398 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,611 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 496,009 |
| மொத்த வாக்குகள் | 623,818 |

## பதுளை

| | |
|---|---|
| மைத்திரி | 249,524 |
| மகிந்த | 249,243 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 458,104 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 7,250 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 465,354 |
| மொத்த வாக்குகள் | 584,939 |

## யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| மைத்திரி | 253,574 |
| மகிந்த | 74,454 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 340,751 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 10,038 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 350,789 |
| மொத்த வாக்குகள் | 546,265 |

## திகாமடுல்ல

| | |
|---|---|
| மைத்திரி | 233,360 |
| மகிந்த | 121,027 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 357,817 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,625 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 360,442 |
| மொத்த வாக்குகள் | 488,067 |

## இரத்தினபுரி

| | |
|---|---|
| மகிந்த | 379,053 |
| மைத்திரி | 292,514 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 680,084 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 7,656 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 687,740 |
| மொத்த வாக்குகள் | 831,712 |

## மாத்தளை

| | |
|---|---|
| மகிந்த | 158,880 |
| மைத்திரி | 145,928 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 309,022 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,653 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 312,675 |
| மொத்த வாக்குகள் | 397,005 |

## அனுராதபுரம்

| | |
|---|---|
| மகிந்த | 281,161 |
| மைத்திரி | 238,407 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 464,432 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,032 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 468,464 |
| மொத்த வாக்குகள் | 600,778 |

## மட்டக்களப்பு

| | |
|---|---|
| மைத்திரி | 209,422 |
| மகிந்த | 41,631 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 256,586 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,580 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 259,166 |
| மொத்த வாக்குகள் | 373,982 |

## கேகாலை

| | |
|---|---|
| மகிந்த | 278,130 |
| மைத்திரி | 252,533 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 536,771 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 6,515 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 543,286 |
| மொத்த வாக்குகள் | 680,414 |

## கம்பகா

| | |
|---|---|
| மைத்திரி | 669,007 |
| மகிந்த | 664,347 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 1,342,496 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 14,647 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 1,357,143 |
| மொத்த வாக்குகள் | 1,680,263 |

## அம்பாந்தோட்டை

| | |
|---|---|
| மகிந்த | 243,295 |
| மைத்திரி | 138,708 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 386,076 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,351 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 389,427 |
| மொத்த வாக்குகள் | 479,433 |

## மஹநுவர

| | |
|---|---|
| மைத்திரி | 466,994 |
| மகிந்த | 378,585 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 855,908 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 10,993 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 866,901 |
| மொத்த வாக்குகள் | 1,087,542 |

## புத்தளம்

| | |
|---|---|
| மைத்திரி | 202,073 |
| மகிந்த | 197,751 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 403,850 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,300 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 408,150 |
| மொத்த வாக்குகள் | 562,984 |

## மொனராகலை

| | |
|---|---|
| மகிந்த | 172,745 |
| மைத்திரி | 105,276 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 281,116 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,449 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 284,565 |
| மொத்த வாக்குகள் | 356,146 |

## நுவரெலியா

| | |
|---|---|
| மைத்திரி | 272,605 |
| மகிந்த | 145,339 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 426,766 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 7,329 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 434,095 |
| மொத்த வாக்குகள் | 547,766 |

## திருகோணமலை

| | |
|---|---|
| மைத்திரி | 140,338 |
| மகிந்த | 52,111 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 195,356 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,805 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 197,161 |
| மொத்த வாக்குகள் | 271,953 |

## பொலநறுவை

| | |
|---|---|
| மைத்திரி | 147,974 |
| மகிந்த | 105,640 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 242,140 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 1,648 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 243,788 |
| மொத்த வாக்குகள் | 307,125 |

## வன்னி

| | |
|---|---|
| மைத்திரி | 141,417 |
| மகிந்த | 34,377 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 180,225 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,416 |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 183,641 |
| மொத்த வாக்குகள் | 261,422 |

# ஜனாதிபதித்தேர்தல் 2015 தொகுதி ரீதியான முடிவுகள்

## யாழ்.மாவட்டம்:

### சாவகச்சேரி

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 23,520 | 73.23% |
| மகிந்த | 5,599 | 18.38% |

### யாழ்ப்பாணம்

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 17,994 | 77.91% |
| மகிந்த | 4,502 | 19.49% |

### காங்கேசன்துறை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 18,729 | 73.11% |
| மகிந்த | 5,705 | 22.27% |

### ஊர்காவற்றுறை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 8,144 | 55.48% |
| மகிந்த | 5,959 | 40.06% |

### கிளிநொச்சி

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 38,856 | 72.11% |
| மகிந்த | 13,300 | 24.68% |

### கோப்பாய்

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 27,161 | 77.44% |
| மகிந்த | 6,211 | 17.71% |

### மானிப்பாய்

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 26,958 | 75.67% |
| மகிந்த | 7,225 | 20.28% |

### நல்லூர்

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 24,929 | 79.87% |
| மகிந்த | 5,405 | 17.32% |

### பருத்தித்துறை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 17,388 | 77.09% |
| மகிந்த | 4,213 | 18.88% |

### உடுப்பிட்டி

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 18,137 | 78.68% |
| மகிந்த | 3,937 | 17.08% |

### வட்டுக்கோட்டை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 20,873 | 69.58% |
| மகிந்த | 7,791 | 25.97% |

**தபால்மூல வாக்களிப்பு - யாழ்.மாவட்டம்**

### யாழ்ப்பாணம்

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 10,885 | 69.17% |
| மகிந்த | 4,607 | 29.27% |

## வன்னி மாவட்டம்:

### மன்னார்

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 45,543 | 85.13% |
| மகிந்த | 6,824 | 12.76% |

### முல்லைத்தீவு

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 35,441 | 78.09% |
| மகிந்த | 7,935 | 17.68% |

### வவுனியா

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 55,683 | 75.13% |
| மகிந்த | 16,678 | 22.51% |

**தபால்மூல வாக்களிப்பு - வன்னி மாவட்டம்**

### வன்னி

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 4,750 | 61.24% |
| மகிந்த | 2,940 | 37.91% |

## மட்டக்களப்பு மாவட்டம்:

### மட்டக்களப்பு

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 97,779 | 80.39% |
| மகிந்த | 21,473 | 17.65% |

### கல்குடா

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 60,342 | 83.72% |
| மகிந்த | 10,337 | 14.34% |

### பட்டிருப்பு

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 44,485 | 81.76% |
| மகிந்த | 8,216 | 15.01% |

**தபால்மூல வாக்களிப்பு - மட்டக்களப்பு**

### மட்டக்களப்பு

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 6,816 | 80.55% |
| மகிந்த | 1,605 | 18.97% |

## காலி மாவட்டம்:

### அக்மீமன

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 39,604 | 52.77% |
| மைத்திரி | 34,807 | 46.38% |

### அம்பலாங்கொட

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 32,871 | 55.15% |
| மைத்திரி | 26,187 | 43.93% |

### பட்டஹெம

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 43,389 | 56.57% |
| மைத்திரி | 32,347 | 42.19% |

### பலபிட்டிய

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 23,283 | 58.45% |
| மைத்திரி | 16,196 | 40.66% |

### பெந்தர- எல்பிட்டிய

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 42,015 | 59.08% |
| மைத்திரி | 28,287 | 39.68% |

### காலி

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 39,547 | 62.58% |
| மகிந்த | 23,184 | 36.69% |

### ஹபரடுவ

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 38,028 | 58.86% |
| மைத்திரி | 25,932 | 40.14% |

### ஹினிதும

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 47,464 | 57.58% |
| மைத்திரி | 34,022 | 41.07% |

### ஹலந்தெனிய

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 34,983 | 63.13% |
| மைத்திரி | 19,752 | 35.65% |

### ரத்கம

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 36,209 | 60.57% |
| மைத்திரி | 23,038 | 38.54% |

**தபால்மூல வாக்களிப்பு - மட்டக்களப்பு**

### பெந்தர- எல்பிட்டிய

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 16,116 | 53.49% |
| மைத்திரி | 13,876 | 46.06% |

**தபால்மூல வாக்களிப்பு - இரத்தினபுரி**

### இரத்தினபுரி

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 11,864 | 56.56% |
| மைத்திரி | 9,053 | 43.16% |

## இரத்தினபுரி மாவட்டம்:

### பலாங்கொட

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 44,798 | 51.81% |
| மைத்திரி | 40,501 | 46.84% |

### எகிலியகொட

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 45,606 | 58.14% |
| மைத்திரி | 32,106 | 40.93% |

### ஹலவண

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 32,336 | 61.05% |
| மைத்திரி | 19,508 | 37.01% |

### கொலன்ன

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 65,270 | 59.00% |
| மைத்திரி | 44,089 | 39.85% |

# ஜனாதிபதித்தேர்தல் 2015 தொகுதி ரீதியான முடிவுகள்

### நிவித்திகல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 46,275 | 58.01% |
| மைத்திரி | 32,188 | 40.35% |

### பொல்மடுல்ல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 34,975 | 50.64% |
| மைத்திரி | 33,095 | 47.92% |

### றக்வன

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 42,940 | 51.99% |
| மைத்திரி | 38,366 | 46.45% |

### இரத்தினபுர

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 54,989 | 55.24% |
| மைத்திரி | 43,608 | 43.08% |

## திருகோணமலை மாவட்டம்:

### மூதூர்

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 57,532 | 87.54% |
| மகிந்த | 7,132 | 10.85% |

### அக்மீமன

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 26,716 | 59.12% |
| மைத்திரி | 24,833 | 47.52% |

### திருகோணமலை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 49,650 | 79.11% |
| மகிந்த | 12,056 | 19.21% |

**தபால்மூல வாக்களிப்பு - மட்டக்களப்பு**

### திருகோணமலை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 8,323 | 56.94% |
| மகிந்த | 6,207 | 42.46% |

## பொலநறுவ மாவட்டம்:

### மெதிரி கிரிய

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 32,875 | 53.89% |
| மகிந்த | 27,623 | 45.28% |

### மின்னேரியா

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 32,745 | 50.229% |
| மகிந்த | 31,747 | 48.69% |

### பொலநறுவ

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 72,875 | 62.86% |
| மகிந்த | 41,961 | 36.69% |

**தபால் மூல வாக்களிப்பு - பொலநறுவ**

### பொலநறுவ

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 9,480 | 68.42% |
| மகிந்த | 4,309 | 31.01% |

## மொனராகல மாவட்டம்:

### பிபிலி

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 37,987 | 60.72% |
| மைத்திரி | 23,704 | 37.89% |

### மொனராகல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 50,408 | 61.69% |
| மைத்திரி | 30,381 | 37.18% |

### வெல்லவாய

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 76,069 | 62.87% |
| மைத்திரி | 43,678 | 36.01% |

**தபால் மூல வாக்களிப்பு - மொனராகல**

### மொனராகல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 8,281 | 52.26% |
| மைத்திரி | 7,513 | 47.41% |

## புத்தளம் மாவட்டம்:

### ஆனமடுவ

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 52,225 | 62.01% |
| மைத்திரி | 31,026 | 36.89% |

### சில்லோ

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 43,928 | 50.05% |
| மைத்திரி | 42,187 | 48.05% |

### நாத்தாண்டிய

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 33,119 | 52.12% |
| மைத்திரி | 29,934 | 47.11% |

### புத்தளம்

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 58,844 | 69.82% |
| மகிந்த | 24,235 | 28.76% |

### வென்னப்புவ

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 39,523 | 52.46% |
| மைத்திரி | 35,218 | 46.75% |

**தபால்மூல வாக்களிப்பு - புத்தளம்**

### புத்தளம்

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 4,864 | 50.58% |
| மகிந்த | 4,721 | 49.09% |

## பதுளை மாவட்டம்:

### பதுளை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 22,659 | 52.41% |
| மகிந்த | 20,062 | 46.04% |

### பண்டாரவளை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 32,766 | 50.42% |
| மகிந்த | 31,272 | 42.12% |

### ஹாலி-எல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 27,797 | 51.17% |
| மகிந்த | 25,420 | 46.08% |

### கப்புத்தளை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 28,725 | 58.02% |
| மகிந்த | 19,725 | 39.84% |

### மகியங்கனை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 42,718 | 56.69% |
| மைத்திரி | 31,495 | 41.08% |

### பாசர

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 25,598 | 54.47% |
| மகிந்த | 20,202 | 42.99% |

### ஊவா பரணகம

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 25,337 | 51.74% |
| மைத்திரி | 22,894 | 46.75% |

### வெலிமட

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 29,431 | 50.68% |
| மகிந்த | 27,874 | 48% |

### வியலுவ

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 23,512 | 59.72% |
| மைத்திரி | 15,128 | 38.42% |

**தபால் மூல வாக்களிப்பு - பதுளை**

### பதுளை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 13,115 | 49.94% |
| மைத்திரி | 13,031 | 49.62% |

### மஸ்கெலியா

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 171,578 | 73.01% |
| மகிந்த | 57,718 | 24.56% |

## நுவரெலியா மாவட்டம்:

### கிங்குராங்கெத்த

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 27,389 | 5076% |
| மைத்திரி | 25,645 | 47.53% |

### கொத்மலை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 36,343 | 59.48% |
| மகிந்த | 23,821 | 38.99% |

### வலப்பனை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 32,340 | 50.59% |
| மகிந்த | 30,354 | 47.48% |

**தபால் மூல வாக்களிப்பு - நுவரெலியா**

### நுவரெலியா

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 6,699 | 52.37% |
| மகிந்த | 6,057 | 47.35% |

# ஜனாதிபதித்தேர்தல் 2015 தொகுதி ரீதியான முடிவுகள்

## மாத்தறை மாவட்டம்:

**அக்குரஸ்ஸ**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 42,860 | 57.07% |
| மைத்திரி | 30,647 | 41.26% |

**தெனியாய**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 44,273 | 57.39% |
| மைத்திரி | 31,716 | 41.12% |

**தெவிநுவர**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 35,795 | 59.32% |
| மைத்திரி | 24,092 | 39.93% |

**ஹக்மன**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 46,635 | 64.15% |
| மைத்திரி | 25,164 | 34.62% |

**கம்புறுப்பிட்டிய**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 40.084 | 63.06% |
| மைத்திரி | 22,939 | 36.09% |

**மாத்தறை**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 35,248 | 50.47% |
| மகிந்த | 34,191 | 48.96% |

**வெலிகம**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 40,715 | 55.36% |
| மைத்திரி | 32,247 | 43.85% |

### தபால் மூல வாக்களிப்பு - மாத்தறை

**மாத்தறை**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 13,270 | 55.87% |
| மைத்திரி | 10,382 | 43.71% |

## மாத்தளை மாவட்டம்:

**தம்புள்ள**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 57,657 | 56.82% |
| மைத்திரி | 42,652 | 45.03% |

**லாஹல**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 33,821 | 60.02% |
| மைத்திரி | 21,511 | 38.29% |

**மாத்தளை**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 36.052 | 56.65% |
| மகிந்த | 26,684 | 41.93% |

**றத்தோட்டை**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 37,319 | 52.07% |
| மகிந்த | 32,235 | 45.52% |

### தபால் மூல வாக்களிப்பு - மாத்தளை

**லஹல**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 8,483 | 50.13% |
| மைத்திரி | 8,394 | 49.06% |

## மகாநுவர மாவட்டம்:

**கலஹெதர**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 21,466 | 51.34% |
| மைத்திரி | 19,818 | 47.39% |

**ஹம்பொல**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 45,328 | 56.81% |
| மகிந்த | 33,293 | 41.73% |

**ஹரிஸ்பத்துவ**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 71,533 | 57.69% |
| மகிந்த | 51,156 | 41.26% |

**ஹேவாகெற்ற**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 28,049 | 52.84% |
| மகிந்த | 24,167 | 45.53% |

**குண்டசாலை**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 41,238 | 55.06% |
| மகிந்த | 32,930 | 43.97% |

**பத-தும்பற**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 37,840 | 57.79.% |
| மகிந்த | 26,762 | 40.87% |

**செங்கடகல**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 36,127 | 57.59% |
| மகிந்த | 26,062 | 41.54% |

**உடு-நுவர**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 38,018 | 58.71% |
| மகிந்த | 25,984 | 40.13% |

**ஜதிநுவர**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 32,298 | 51.19% |
| மகிந்த | 30,194 | 47.86% |

**மகாநுவர**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 20,316 | 6014% |
| மகிந்த | 10,200 | 33.21% |

**நாவலப்பிட்டிய**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 40,233 | 54.25% |
| மகிந்த | 52,619 | 43.98% |

**தெல்தெனிய**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 18,624 | 49.83% |
| மகிந்த | 18,150 | 48.56% |

**உடு-தும்பர**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 27,722 | 59.09% |
| மைத்திரி | 18,472 | 39.37% |

**பண்டுவஸ்நுவர**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 32,197 | 55.73% |
| மைத்திரி | 25,172 | 43.57% |

### தபால் மூல வாக்களிப்பு - மகாநுவர

**மகாநுவர**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 19,100 | 51.47% |
| மகிந்த | 17,880 | 48.18% |

## குருநாகல் மாவட்டம்:

**பிங்கிரிய**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 37,574 | 54.28% |
| மைத்திரி | 31,166 | 45.02% |

**தம்பதெனியா**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 41,421 | 55.31% |
| மைத்திரி | 32,964 | 42.02% |

**டன்ஹெஸ்லங்கட**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 28,010 | 53.45% |
| மைத்திரி | 23,847 | 45.05% |

**கல்கமுவ**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 46,848 | 59.66% |
| மைத்திரி | 31,027 | 39.51% |

**கிரியல்ல**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 38,538 | 52.68% |
| மைத்திரி | 33,944 | 46.04% |

**கதுகம்பில**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 41,990 | 55.13% |
| மைத்திரி | 33,655 | 44.19% |

**குளியாப்பிட்டிய**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 39,115 | 50.61% |
| மைத்திரி | 37,528 | 48.45% |

**குருநாகல்**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 37,895 | 54.28% |
| மகிந்த | 31,429 | 45.02% |

**மாவத்தகம**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 35,591 | 51.22% |
| மகிந்த | 33,243 | 47.84% |

**நிகவரெட்டிய**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 40.015 | 55.47% |
| மைத்திரி | 31,444 | 43.49% |

**பொல்காவல**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 31,108 | 51.92% |
| மைத்திரி | 28,365 | 47.34% |

**வாரியப்பொல**

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 34,499 | 57.92% |
| மைத்திரி | 24,562 | 41.24% |

# ஜனாதிபதித்தேர்தல் 2015 தொகுதி ரீதியான முடிவுகள்

### யாப்பகூவ

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 49,289 | 57.25% |
| மைத்திரி | 36,058 | 41.88% |

### தபால் மூல வாக்களிப்பு - குருநாகல்

### குருநாகல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 33,384 | 51.22% |
| மகிந்த | 31,591 | 48.47% |

## கேகாலை மாவட்டம்:

### அரணாயக்க

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 20,742 | 51.04% |
| மைத்திரி | 19,297 | 47.48% |

### தெட்டிக்கம

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 36.838 | 52.87% |
| மைத்திரி | 32,163 | 46.16% |

### தெரனியாகல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 28,841 | 54.05% |
| மைத்திரி | 23,648 | 44.47% |

### ஹலிகமுவ

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 28,608 | 55.11% |
| மைத்திரி | 22,699 | 43.73% |

### கேகாலை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 30.452 | 55,54% |
| மைத்திரி | 23.853 | 43.51% |

### மாவனல்ல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 40,066 | 57.74% |
| மகிந்த | 28,561 | 41.16% |

### ரம்புக்கன

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 27,400 | 54.12% |
| மைத்திரி | 22.690 | 44.82% |

### எட்டியாந்தோட்ட

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 30.890 | 52.62% |
| மைத்திரி | 26.970 | 45.94% |

### தபால் மூல வாக்களிப்பு - கேகாலை

### கேகாலை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 14.976 | 51.21% |
| மைத்திரி | 14,163 | 48.43% |

### தபால் மூல வாக்களிப்பு - களுத்துறை

### களுத்துறை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 14,130 | 53.15% |
| மைத்திரி | 12,962 | 46.46% |

## களுத்துறை மாவட்டம்:

### அகலவத்தை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 44.750 | 44.750% |
| மைத்திரி | 33.995 | 42.67% |

### பண்டாரகம

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 61,199 | 55.32% |
| மைத்திரி | 48,469 | 43.81% |

### பேருவளை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 53,280 | 56.96% |
| மகிந்த | 39,424 | 42.15% |

### புலஸ்திநகர

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 37,311 | 56.17% |
| மைத்திரி | 28,341 | 42.66% |

### களுத்துறை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 48,851 | 51.78% |
| மைத்திரி | 44,804 | 47.49% |

### மத்துகம

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 45,984 | 53.72% |
| மைத்திரி | 38,668 | 45.17% |

### பாணந்துறை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 46,820 | 5015% |
| மகிந்த | 45,908 | 49.18% |

### ஹொறன

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 57,633 | 57.34% |
| மைத்திரி | 42,065 | 41.85% |

## அம்பாத்தோட்ட மாவட்டம்:

### பெலியத்த

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 39,513 | 63.65% |
| மைத்திரி | 21,912 | 35.29% |

### முல்கிரியகல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 52,202 | 64.58% |
| மைத்திரி | 27,601 | 34.14% |

### தங்காலை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 62,739 | 65.18% |
| மைத்திரி | 32,592 | 33.87% |

### திஸ்ஸமகாராம

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 78,546 | 59.99% |
| மைத்திரி | 50,977 | 38.93% |

## கம்பஹா மாவட்டம்:

### அத்தநகல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 54,777 | 51.71% |
| மைத்திரி | 50,380 | 47.56% |

### பியகம

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 50,173 | 50.46% |
| மைத்திரி | 48,667 | 48.94% |

### டெவலப்பிட்டிய

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 45,813 | 52.91% |
| மைத்திரி | 40,112 | 46.33% |

### தபால் மூல வாக்களிப்பு - அம்பாந்தோட்டை

### அம்பாந்தோட்டை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 10.295 | 64.45% |
| மைத்திரி | 5,620 | 35.18% |

### தொம்பே

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 54,714 | 58.29% |
| மைத்திரி | 38.491 | 41% |

### கம்பஹா

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 63,962 | 53.95% |
| மைத்திரி | 53,922 | 45.48% |

### யா-எல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 58,669 | 52.01% |
| மகிந்த | 53,481 | 47.41% |

### ஹற்றன்

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 58,507 | 51.49% |
| மகிந்த | 54,354 | 47.83% |

### ஹெலனிய

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 37,884 | 53.16% |
| மகிந்த | 32,856 | 46.11% |

### மாஹர

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 64,314 | 53.43% |
| மைத்திரி | 55,334 | 45.97% |

### மினுவாங்கொட

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 54,929 | 51.21% |
| மைத்திரி | 51,581 | 48.09% |

### தபால் மூல வாக்களிப்பு - கம்பஹா

### கம்பஹா

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 20,386 | 49.93% |
| மகிந்த | 20,296 | 40.71% |

### நீர்கொழும்பு

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 53,331 | 67.01% |
| மகிந்த | 25,432 | 32% |

### வத்தளை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 56,541 | 59.32% |
| மகிந்த | 38.001 | 39.87% |

### மீரிகம

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 51,244 | 52.75% |
| மைத்திரி | 45,202 | 46.53% |

# இயற்கை இனிய வைத்தியன்

சி. சிவன்சுதன்
வைத்திய நிபுணர்
யாழ்.போதனா வைத்தியசாலை



இயற்கையை இறைவனாகச் சித்தரித்து வழிபடும் மரபு அன்றுதொட்டு இருந்துவருகின்றது. அந்த இயற்கை என்ற இறைவன் வைத்தியத்திலே விற்பன்னனாக இருப்பதால் அந்த இறைவனுக்கு வைத்தீஸ்வரன் என்றும் ஒரு பெயர் இருக்கிறது. நோய்த்தடுப்புக்கும் நோய் குணமாக்கலுக்கும் அடி நாதமாய் விளங்கும் இயற்கை மூலமாகக் கிடைக்கும் வளங்களை அசட்டைசெய்து செயற்கையான பொருட்களின் கால்களிலே நாம் முற்றாக சரணாகதி அடைந்துகொண்டிருக்கிறோம். அதனால் நோய்வாய்ப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

வாழ்க்கை செயற்கைத்தனமாகி, இயந்திரமாகி, உணவு-வகைகள் கூட பக்கற்றுகளிலும் பேணிகளிலும் வருகின்ற இரசாயன உணவுகளாக மாறி, பானங்கள் எல்லாம் போத்தலில் வருகின்ற செயற்கை சுவையூட்டிகளின் கலவையாகி, மீசை வெட்டுவதற்குக்கூட மிசின் தேவை என்று ஆகி, எமது உடற் பயிற்சிகள் இயந்திரங்களில் என்று ஆகி, எங்கள் புன்னகைகளும் நன்றி தெரிவிப்புகளும் உதட்டளவில் வரும் செயற்கை உபசாரமாக மாறி, இயற்கையிலிருந்து நாம் அந்நியப்பட்டு சென்றுகொண்டிருக்கிறோம்.

இயற்கையான சுத்தமான காற்று பல நோய்களை மாற்றும். நுரையீரலைப் பாதுகாத்து பல நோய்களைத் தடுக்கும். காற்றுக்காலம் தொடங்கியதும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை குறைவது இதற்கு ஒரு நல்ல சான்று. இயற்கையான காற்றுக்கு கதவடைப்பு செய்து பூட்டிய அறையினுள் செயற்கை மின்விசிறியை சுற்றவிட்டு, சுற்றிவரும் அசுத்தக்காற்றை சுவாசித்து நோயை விலைகொடுத்து வாங்கும் வில்லங்க வாழ்வு அரங்கேறிக்கொண்டிருப்பது ஏன்?

சாதாரண தடிமன், காய்ச்சல், தலையிடி, தசைப்பிடிப்பு, வயிற்றுக்குழப்பம் போன்றவை மருந்துகள் எதுவுமின்றி இயற்கையாக மாறக்கூடியவை. சிறு சிறு அறிகுறிகளுக்கெல்லாம் மருந்து பாவிக்க நினைப்பது நல்லதல்ல. அவற்றை தானாக மாறவிடுவது உடல் ஆரோக்கியத்துக்கு நல்லது. பூப்பறிப்பதற்கு ஏன் கோடரியைத் தூக்கவேண்டும்? இயற்கையில் மாறக்கூடிய நோய்களுக்கு ஏன் மாத்திரைகளைக் கையில் எடுக்கவேண்டும்?

இயற்கையை இரசிக்கும் பழக்கம் பல நோய்களைத் தீர்க்கவும் தடுக்கவும் வல்லது. பச்சைப் புற்தரையை, பஞ்சுபோன்ற முகில்களை, வீசும் காற்றை, விடி காலைப் பொழுதை, பள்ளிசெல்லும் சிறார்களை, பறக்கும் குருவிகளை, பாட்டனின் பழங்கதையை, பாட்டியின் புறுபுறுப்பை, மலரும் பூக்களை என இரசிப்பதற்கு எத்தனையோ இருக்கின்றன. இந்த பழக்கம் மனதுக்கும் உடலுக்கும் ஆரோக்கியத்தைத் தரும். மனதில் ஏற்பட்ட காயங்கள் பலவற்றை காலம் தானாக மாற்றிவிடுவதை நாம் அன்றாட வாழ்வில் அவதானித்திருக்கிறோம்.

கலப்படமற்ற இயற்கையான உணவுவகைகள், நோயைத் தடுக்கவும், நோயைத் தீர்க்கவும் வல்லவை. ஊர்க்கோழி முட்டை, இளநீர், இயற்கையான உணவு உண்ணும் பசுவினுடைய பால், மோர், பச்சையிலை உண்ணும் ஆட்டின் பால், இயற்கை உரமிட்டு மருந்து தெளிக்காமல் வளர்க்கப்பட்ட மரக்கறி வகைகள், ஊர்க்கோழி இறைச்சி, இயற்கையாக வளரும் அகத்தி, சண்டி, முருங்கை, தவசி முருங்கை போன்றவற்றின் இலைவகைகள், வாழைப்பொத்தி, தானாகப் பழுத்த பழவகைகள், கடலிலே பிடித்த [illegible] மீன்வகைகள், இறால், தேசிக்காய், சுண்டங்கத்தரி என எத்தனை இனிமையான, இயற்கையான, இலகுவில் கிடைக்கக்கூடிய உணவு வகைகள் எம்மத்தியில் உள்ளன. இருந்தும் சத்துமாப் பேணிகளுக்கும் இரசாயன உணவுகளுக்கும் நாம் ஆசைப்படுவதன் காரணம் என்ன?

சூரியபகவான் எமக்கு சக்தியை மட்டும் கொடுக்கவில்லை. பல நோய்க்கிருமிகளிலிருந்தும் எம்மைப் பாதுகாத்து வருகின்றான். அன்றாட பாவனைப்பொருட்களான தலையணை, பாய், மெத்தை போன்றவற்றை சூரிய வெயிலில் காயவிடுவதன் மூலம் பல ஆபத்தான கிருமிகளை இயற்கையான முறையில் அழித்துவிட முடியும். இயற்கையாகப் பெ-ாழியும் மழை நீரைச் சேகரித்து அருந்திவருவது ஆரோக்கியத்துக்கு நல்லது மட்டுமல்ல, புற்றுநோய்கள் மற்றும் சிறுநீரக நோய்களிலிருந்தும் எம்மைப் பாதுகாக்கும்.

பூட்டிய அறையினுள்ளேயும், வீட்டினுள்ளேயும் இரும்பு இயந்திரங்களில் ஏறி உடற்பயிற்சி செய்வதிலும் பார்க்க இயற்கையுடன் ஒன்றி வீட்டுத்தோட்டமோ விலங்கு விவசாயமோ செய்வதிலும்.

# கே.வி. மகாதேவன்

48

- பி.ஜி.எஸ்.மணியன் -



பீம்சிங்கின் இயக்கத்தில் சிவாஜி, பத்மினி, கே.ஆர்.விஜயா நடிப்பில் வெளிவந்த படம் "பாலாடை".

பி. சுசீலா பாடும் "பட்டாடைத் தொட்டில் கட்ட வேண்டும்" என்ற பாடல் காதுகளுக்கு ரம்மியமாக ஒலித்தது. மற்றபடி பெரிதாக எதுவும் அமையவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

சரஸ்வதி சபதம் படத்தை அடுத்து பெரியபுராணத்தை அடிப்படையாகக் கொண்டு நாயன்மார்களின் வரலாற்றை "திருவருட்செல்வர்" என்ற பெயரில் தயாரித்து இயக்கினார் ஏ.பி. நாகராஜன்.

நடிகர் திலகம் - வில்லவன் என்ற மன்னனாகவும், தொடர்ந்து சேக்கிழார், திருக்குறிப்புத் தொண்டர், சுந்தரர், அப்பர் ஆகிய நாயன்மார்களை கண்முன்னே நடமாடவிட்டிருந்தார்.

அவருடன் ஜெமினி கணேசன், முத்துராமன், பத்மினி, கே.ஆர்.விஜயா, சாவித்திரி, நாகேஷ், மனோரமா என்று நட்சத்திரக்கூட்டமே படத்தில் இருந்தது.

படத்தின் பெயர் சொன்னாலே நினைவுக்கு வரும் பாடல் "மன்னவன் வந்தானடி" - இந்தப் பாடலைப் பற்றி ஏகப்பட்ட நபர்கள் சொல்லியாயிற்று. எழுதியும் ஆயிற்று.

படத்தின் ஆரம்பக் காட்சியே வழக்கம் போல கே.வி.மகாதேவனின் இந்தப் பாடல் காட்சியுடன் தான்.

ஆரம்பத்தில் வரும் விருத்தங்களை ராகமாலிகையாக அமைத்தவர் "நின் கொடி வாழ்க படை வாழ்க குலம் வாழ்க நலமும் பல்லாண்டு வாழ்க" என்று கோரஸ் பாடகியர் முடித்ததும் துவங்கும் இணைப்பிசையில் வீணையில் இடம்பெறும் ரஞ்சனி ராக பிட். அதைத் தொடர்ந்து "மன்னவன் வந்தானடி தோழி" என்று பி. சுசீலா எடுப்பாகத் தொடங்கும் போதே ஆரம்பிக்கும் கல்யாணி ராகம் நம்மை கட்டிப்போட்டுவிடுகிறது. சொக்கவைத்துவிடுகிறது.

சரணங்களில் சுசீலாவின் குரல்களுக்கிடையே வரும் நாட்டிய ஜாதிகளைப் பாடியவர் நடன இயக்குனர் பி.எஸ். கோபாலகிருஷ்ணன்.

பாடலுக்கு பிரபல கடம் வித்வான் டி.எச். விநாயக்ராம் கடம் வாசித்திருக்கிறார்.

கடைசியில் வரும் சரண வரிகளை கவியரசர் இப்படி எழுதி இருப்பார்.

"விரைவினில் நீ. மணமலர் தா. திருமார்பா. தா-மதமா. மயிலெனை கா."

இந்த வரிகளை ஸ்வர அட்சரங்களாக வரும்படி ஒவ்வொரு வார்த்தையின் கடைசியில் ஒற்றெழுத்துக்களை ஸ்வரங்களாக அமைத்து கடைசியில் "நீ த ப ம க" என்று ஸ்வரங்களாக துரித காலத்தில் சுசீலாவைப் பாடவைத்து கேட்பவரை வியக்கவைத்திருக்கிறார் கே.வி. மகாதேவன்.

கல்யாணி ராகத்தின் சொரூபம் முழுவதுமாக வெளிப்படும் பாடல் இது.


பிரபல வீணை இசை மேதை காலம் சென்ற எஸ். பாலச்சந்தர் அடிக்கடி தன் நண்பர்களிடமும் சிஷ்யர்களிடமும் இப்படிச் சொல்லுவாராம்.:

"கல்யாணி ராகம் கேக்கணுமா. கே.வி. மகாதேவனோட "மன்னவன் வந்தானடி" பாட்டைக் கேளு. அதுதான் கல்யாணி"

இதைவிடச் சிறந்த பாராட்டை வேறு ஒருவர் தரமுடியுமா என்ன?

அவரது பாராட்டைக் கேட்ட கே.வி. மகா-தேவனோ மிகுந்த கூச்சத்துடன் இப்படிச் சொன்னாராம்: "இல்லை, அம்பிகாபதி படத்திலே இசைச் சக்ரவர்த்தி ஜி.ராமநாதன் "சிந்தனை செய்மனமே" என்று போட்டிருப்பாரே அது கல்யாணி. அதுக்கு முன்னாலே நான் போட்டதெல்லாம் ஒண்ணுமே இல்லே"

இந்த அளவுக்கு பணிவும் தன்மையும் வேறு எவரிடமும் எதிர்பார்க்க முடியுமா என்ன?




சேக்கிழார் பெரியபுராணத்தை அரங்கேற்றம் செய்யும் காட்சி. அவரது காப்புச் செய்யுளான "உலகெலாம் உணர்ந்தோதற்கரியவன்" ஒரு விருத்தமாக மலர்கிறது. டி.எம்.எஸ். - பாடும் இந்த விருத்தத்தை வலஜி ராகத்தில் அமைத்திருக்கிறார்.

திருக்குறிப்புத் தொண்டர் கதை.. "ஆத்து வெள்ளம் காத்திருக்கு" என்ற ஜனரஞ்சகப் பாடலுடன் துவங்குகிறது.

"இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி" - சித்தர் பாடல் பாணியில் கவியரசர் எழுதிய பாடல். மிக எளிமையாக காவடிச் சிந்து பாணியில் இசை அமைத்திருக்கிறார் கே.வி.மகாதேவன். கஹரப்பிரியாவை இவ்வளவு எளிமைப்படுத்திக் கொடுக்கமுடியுமா என்ன என்று வியக்க வைக்கும் பாடல். இந்தப் பாடல் முழுக்க தந்தி வாத்தியங்கள் எதையும் (வயலின், வீணை, சி[illegible]) பயன்படுத்தாமல் வெறும் தாளவாத்தியங்களை மட்டுமே பயன்படுத்தி இசை அமைத்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

தொடரும் சுந்தரர் கதையில் "பித்தா பிறை சூடி" என்ற சுந்தரர் தேவாரம் ஒரு தொகையறாவாக ஆரம்பித்து "சித்தமெல்லாம் எனக்கு சிவமயமே" என்ற கண்ணதாசனின் பாடலாக மலருகிறது. இரண்டுமே சிந்துபைரவி ராகத்தில் அமைந்திருக்கிறது.

அடுத்து வரும் அப்பர் - சம்பந்தர் சம்பந்தப் பட்ட கதைகளில் இருவர் தேவாரங்களையும் அருமையாக அமைத்து கேட்பவர் காதுகளையும் மனங்களையும் கொள்ளைகொண்டு விட்டார் கே.வி.மகாதேவன்.

பொதுவாக சிறுவர்-சிறுமியர் பாடும் பாடல்கள் என்றால் பெண் பாடகிகளான எம்.எஸ். ராஜேஸ்வரி, எல்.ஆர். ஈஸ்வரி, பி.சுசீலா போன்ற பாடகியரே பாடுவதுதான் வழக்கமாக இருந்துவந்த நிலையில் திருஞான சம்பந்தராக நடித்த மாஸ்டர் பிரபாகருக்கு பின்னணியாக ஒரு பத்து வயது சிறுவனையே பாடவைத்தார் கே.வி. மகாதேவன்.

பிரபல பாடகர் திருச்சி லோகநாதனின் மகனான ரீ.எல்.மகராஜன் மாஸ்டர் மகராஜன் என்ற பெயருடன் பின்னணிப் பாடகராக பத்து வயதில் அறிமுகமான முதல் படம் இதுதான்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்று பீம்ப்ளாஸ் ராகத்தில் அந்த சிறுவயதில்தான் எத்தனை அழகாகச் சங்கதிகள் வெளிப்படப் பாடியிருக்கிறார் ரீ.எல்.மகராஜன்!

விருத்தமாக மகராஜன் பாடியதும் அப்பர் தேவாரமான "மாசில் வீணையும்" அதே பீம்ப்ளாஸில் டி.எம்.எஸ். பாடுகிறார்.

(தொடரும்)

பயணங்களுக்கு சைக்கிள்களைப் பயன்படுத்துவதிலும், நடந்து செல்வதிலும் ஆர்வத்தை வளர்த்துக்கொள்வதன் மூலமும், எமது அன்றாட தேவைகளை நாமே செய்வதன் மூலமும் நாம் செய்யும் உடற்பயிற்சியை பயன்மிக்கதாகவும் மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியைக் கொடுக்கக்கூடியதாகவும் மாற்றிக்கொள்ளலாம்.

இயற்கைக்கும் சில சமயம் இயலாமல் போகலாம். சில நோய்த்தடுப்புகளுக்கும் நோய் குணமாக்கல்களுக்கும் இயற்கையான நடைமுறைகள் மட்டும் போதாமல் போகலாம். அந்தச் சந்தர்ப்பங்களில் மட்டும் செயற்கை என்ற ஆயுதத்தைத் தூக்குவோம். மொத்தத்தில் செயற்கைத்தனத்தின் கால்களில் சரணாகதி ஆகாமல் செயற்கையை சாதுரியமாகப் பயன்படுத்த முயல்வோம். இயற்கை என்ற இ[illegible]ப வைத்தியனின் கவனிப்பிலே சுகம்பெறுவோம்.

(நன்றி: Jaffna Diabetic Centre.org)

# ஏ.ஆர்.ரஹ்மானின் "மில்லியன் டொலர் புஜம்"

**- பாஸ்டன் பாலா -**



இந்தியாவில் ஒரு சிறு ஊரில் பிறந்து வளர்ந்த தினேஷ் படேலும், ரிங்கு சிங்கும் அமெரிக்கா வருகிறார்கள் பிட்ஸ்பேர்க் நகர பேஸ்போல் விளையாட்டு அணியில் சேர்ந்து பந்து வீச்சாளர்களாகிறார்கள்.

இந்த உண்மைக் கதையைப் பின்னணியாக வைத்து Million Dollar Arm வெளிவந்திருக்கிறது. இந்தப் படத்திற்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்திருக்கிறார்.

இந்தத் திரைப்படத்திற்கு இசையமைக்க ஒத்துக் கொண்டேபோது கொடுத்த பேட்டியில் ரஹ்மான் இவ்வாறு சொல்கிறார்: "ஸ்லம் டோக் மில்லியனரு"க்குப் பிறகு ஆங்கிலப் படங்களுக்கு இசையமைக்க நிறைய வாய்ப்புகள் வந்தன. Couples Retreat, Warriors of Heaven and Earth, 127 Hours, people like us இப்படி நிறைய, நிறைய! அதில் நான் விரும்பித் தேர்ந்தெடுத்தது 127 Hours மட்டும்தான். அது ஒஸ்கார் பரிந்துரை வரை போனது. ஆனால், அடுத்த மூன்று வருடங்களுக்கு இந்தியாவை அடிப்படையாக வைத்து வரும் ஹொலிவுட் படங்களுக்கு இசையமைக்க நான் ஒப்புக்கொள்ள வில்லை. அப்படி, ஒத்துக் கொண்டால், "ரஹ்மானை - தெற்காசியா களத்தில் நடக்கும் கதைகளுக்குத்தான் பயன் படுத்தலாம்" எனத் தேங்கிப் போயிருப் பேன். மேலும், இந்தியச் சூழலில் இசையமைக்க, எனக்கு தமிழும், ஹிந்தியும் இருக்கின்றன. அவற்றிலும் நான் தொடர்ந்து படங்கள் செய்து கொண்டுதானே இருக்கிறேன். நாலு வருடங்களுக்குப் பின்னால் மறுபடியும் ஒரு ஆங்கிலப் படம் பண்ணலாம் என்று நினைத்தேன். அந்த சமயத்தில் "மில்லியன் டொலர் ஆர்ம்" படத்தின் இயக்குநர் கிரெய்க் கில்லஸ்ப்பியும் என்னை அணுகினார். இது விளையாட்டு குறித்த திரைப்படம்தான். ஆனால், உள்ளுக்குள் அற்புதமான இன்னொரு கதையும் மனித மனங்களின் ஊசலாட்டங்களும் ஓடுகின்றன. "லகான்" மாதிரி என்று சொல்லலாம்."

படத்தில் எல்லா மொழிகளிலும் பாடல்கள் வருகின்றன. படத்தின் இறுதியில் "என் சுவாசக் காற்றே" படத்தில் இடம்பெற்ற சித்ராவும் உன்னிகிருஷ்ணனும் பாடிய "திறக்காத காட்டுக்குள்ளே" பாடல் உணர்ச்சிப்பிழம்பான கணத்தில் ஒலிக்கிறது.

ஹொலிவுட் படத்தில் தமிழ்ப் பாடல் வருவதில் எந்தப் புதுமையும் இல்லை. மைக்கேல் டானா இசையமைத்த (Mychael Danna) Life of Pi திரைப்படத்தில் பாம்பே ஜெயஸ்ரீயின் தாலாட்டு ஒலித்தது. ரஹ்மானே இசையமைத்த The Accidental Husband படத்தில் "தெனாலி" தமிழ்ப்படத்தின் "சுவாசமே" பாடலும், "அலைபாயுதே" படத்தில் வரும் "யாரோ" யாரோடி!" பாடலும் ஒலித்திருக்கின்றன. Couples Retreat என்னும் ஆங்கிலப் படத்திற்கென்றே பிரத்தியேகமாகப் போடப்பட்ட "குறுகுறு கண்ணாலே" பாடலும் ஹொலிவுட் படத்தில் முன்னமேயே இருக்கிறது:

எனவே, தமிழ்ப்பாடல் இடம் பெற்ற படம் என்பதை விட, இந்தப் படத்தை ஏ.ஆர்.ரஹ்மானின் இசையில் வித்தியாசப்பட்டு நிற்கும் படம் என்று பார்க்கலாம். திரைப்பட இசை என்பது சத்தமாக ஒலிக்க வேண்டும் என்பது அந்தக் காலம். அதன் பின் அடக்கி வாசித்து, திரையில் நடக்கும் விஷயங்களை காட்சிப்படுத்துவதை தூக்கலாகக் காண்பிப்பது சமீபத்திய காலம். வருங்காலத்தில் திரை இசை எப்படி இருக்கும்?

"மில்லியன் டொலர் ஆர்ம்" திரையிசை போல் இருக்கும்.

ஹிப் ஹொப் இசையில் புகழ் பெற்றிருக்கும் Wale, பொப் இசைப் பாடகி முவு Tunstall, வார்த்தைகளை மட்டும் அவசரகதியில் தாளலயத்தோடு சுழற்றும் Iggy Azalea என எல்லோருடனும் சேர்ந்து இசை கோர்த்திருக்கிறார் ரஹ்மான்.

தமிழ்ப்படங்களில் ஒரே படத்தில் உற்சாகமான பாடல் இருக்கும், சோகப் பாடலும் இருக்கும், குத்துப்பாடலும் வரும், கொண்டாட்டப் பாடலும் உடன் வரும். ஆனால், ஆங்கிலப் படங்களும் அவற்றிற்கான பாடல் அமைப்புகளும் ஒரேயொரு பண்பில் அமைந்தவை. அந்த வழக்கத்தை ரஹ்மான் மெதுவாக மாற்றுகிறார். அதே சமயம் ஹொலிவுட் படங்களுக்கு ஏற்றாற்போல் மாற்றுகிறார். எனவே, பழக்கமான ஒன்றாக அமெரிக்க சினிமா பார்ப்பவருக்கு அது அமைந்து விடுகிறது.

"மில்லியன் டொலர் ஆர்ம்" இன்னொரு முக்கியமான வகையிலும் ரஹ்மானின் ஹொலிவுட் இசையமைப்பில் முன்னோடியாக இருக்கிறது. மணிரத்னத்தின் "பம்பாய்" முடிவில் ஒலிக்கும் "மலரோடு மலரிங்கு" பாடலின் முடிவில் கூட ஓங்கி ஒலித்துத்தான் உச்சகட்டம் அடைய முடிந்திருக்கிறது. ஆனால், இந்த ஆங்கிலப் படத்தில் வெகு குறைவான சத்தம் கொடுத்தாலும் அதிவீரியமான பாய்ச்சலாக, ரகுமானால் இறுதிக் காட்சியை ஊடுருவ வைக்க இயலுகிறது.

இது வெறும் ஒலியைக் குறைத்து வைப்பதாலோ, சத்தத்தை கட்டுப்படுத்துவதாலோ உருவாவதில்லை. எந்த சமயத்தில் என்ன இசைக்கருவியைப் பயன்படுத்த வேண்டும் என்னும் நுணுக்கமும் அமெரிக்கக் கலாச்சாரத்தின் குரலை எங்கு இணைக்க வேண்டும் என்னும் ஆழமான புரிதலும் கலந்து உருவாகுவதால் வரும் அற்புத ஆக்கம்.

இந்தப் படம் ஒஸ்கார் விருதுகளுக்கான நெடும் பட்டியலில் இடம் பெற்றிருந்தாலும், மூன்று-நான்கு படங்கள் மட்டுமே செல்லும் இறுதிப் பரிந்துரையில் இடம்பிடிக்கப் போவதில்லை என வல்லுநர்கள் கருதுகிறார்கள். ஸ்டீ[illegible]பன் ஹொகிங் வாழ்க்கையை சொல்லிய Theory of Everything திரைப்படத்திற்கு இசையமைத்த யோஹான் ஜோஹான்ஸன், அல்லது Interstellar படத்தின் ஹான்ஸ் ஜிம்மர் அல்லது ஆலன் டூரிங் வாழ்க்கையை திரையாக்கிய The Imitation Game படத்தின் அலெக்ஸாண்டர் என முன்னிறுத்துகிறார்கள்.

கோச்சடையான், ஐ போன்ற திரைப்படங்களுக்காகவும் ஏ.ஆர். ரஹ்மானின் பெயர் ஒஸ்கார் நீள்பட்டியல் பரிந்துரையில் இடம் பெற்றிருப்பதால், "மில்லியன் டொலர் ஆர்ம்" பரிந்துரையையும் பத்தோடு பதினொன்றாகக் கருதி விட்டுவிடலாம்.

# விசேட மூக்குக்-கண்ணாடி!




கிட்டப் பார்வை, தூரப் பார்வை கோளாறுகளுக்கு மூக்குக் கண்ணாடி அணிவது எல்லாருக்கும் தெரியும். ஜப்பானில் இப்போது தயாராகியுள்ள இந்த மூக்குக் கண்ணாடியை அணிந்து கொண்டால், நீங்கள் வேலை செய்து எந்த அளவுக்குக் களைத்துப் போய்விட்டீர்கள் - சோர்ந்து போனீர்கள் என்று அது உங்களுக்குச் சொல்லிவிடும். இதற்காக இந்தக் கண்ணாடியில் மூன்று எலக்ட்ரோ அக்குலோகிராபி (EOG) சென்சர்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த சென்சர்கள் கண் கருவிழியின் அசைவு, கண் சிமிட்டல்கள் இவற்றைக் கணக்கில் எடுத்து, உடல் நிலையைப் பற்றிய தகவல்களைச் சொல்லிவிடுகின்றன. இது தவிர, கண்ணாடியின் பிரேமில் பொருத்தப்பட்டுள்ள கருவி, தோளின் அசைவுகளைக் கொண்டு, நடக்கும்போது, ஓடும்போது ஏற்படும் உடல்நிலை மாற்றங்களையும் சொல்லிவிடுகிறது. எப்படிச் சொல்லும் என்று கேட்கிறீர்களா? இந்தக் கண்ணாடி கூறும் தகவல்கள் உங்களுடைய அன்ட்ரோய்ட் ஸ்மார்ட் போனுக்குச் சென்று அதன் திரையில் தகவல்கள் தெரிந்துவிடும். கார் ஓட்டும் ஒருவருக்கு லேசாகச் தூக்கம் வந்துவிட்டது என்பதைக் கூடச் சொல்லிவிடும் இந்த மூக்குக் கண்ணாடி.

# சிறியதும், பெரியதும்



பெண்களின் மூக்கைவிட ஆண்களின் மூக்கு 10 சதவீதம் பெரியதாக உள்ளது. பிறக்கும்போது ஆண் குழந்தைக்கும், பெண் குழந்தைக்கும் மூக்கின் அளவு சமமாகத்தான் உள்ளது. அவர்களது 11ஆவது வயதில்தான் அளவு வேறுபாடு தொடங்குகிறது. ஆண்களின் உடலில் சதைப்பகுதி அதிகமாக உள்ளது. இதன் வளர்ச்சி பெருக்கத்திற்கு அதிக அளவில் ஒட்சிசன் தேவையாக உள்ளது. இதனால்தான் அதிக அளவு ஒட்சிசனை உள்ளிழுக்க மூக்கின் அளவு பெரியதாக உள்ளது. பெண்ணின் உடலில் சதையைவிட கொழுப்பே அதிகமாக உள்ளது. இதனால் அவர்களின் மூக்கு சிறியதாக உள்ளது.


# போனில் கையெழுத்து



ஸ்மார்ட் பேனா மூலம் ஐபோனில் இணைக்கப்பட்டு பேப்பரிலோ அல்லது ஏதாவது ஒரு பொருளில் எழுதினால் ஐ போன் திரையில் அதே எழுத்து பிரதிபலிக்கும் வகையில் புதிய தொழில்நுட்பம் சந்தைப்படுத்தப்பட உள்ளது. பேனாவின் அசைவின் படி அதன் இயக்கத்தினை உள்வாங்கி ஐபோன் அந்த எழுத்துக்களை காட்சிப்படுத்தும். இதற்கான அப்ளிகேசனை ஐபோனில் நிறுவி இதனை செயற்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விரைவில் அப்பிள் நிறுவனம் இந்த தொழிநுட்பத்தை தனது தயாரிப்புகளில் அறிமுகப்படுத்தும் என தெரிகிறது.

# புதிர்ப்போட்டி இல. 23

01)பின்வரும் எவ்வுருக்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சமச்சீர்க் கோடுகள் உள்ளன?



(1) A,B (2) A,C (3) A,D
(4) B,C (5) C,E

02) திலகாவின் புள்ளிகள் அமலாவின் புள்ளிகளிலும் கூடியன. அமலாவின் புள்ளிகள் கமலாவின் புள்ளிகளிலும் கூடியனவும் நிமலா வின் புள்ளிகளிலும் குறைந்தனவும் ஆகும். இவற்றிலிருந்து பின்வரும் எம்முடிவுக்கு வரலாம்?

(1). நிமலா மிகவும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

(2). கமலா 2 ஆவது கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

(3). அமலா 3 ஆவது கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

(4). நிமலாவின் புள்ளிகள் திலகாவின் புள்ளி களிலும் குறைவாகும்.

(5). திலகா மிகவும் கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

03) பொதுச் சாதாரணப் பரீட்சை (CGT) யில் ஒரு குறித்த குறைந்தபட்சப் புள்ளியைப் பெறுதல் பல்கலைக்கழக அனுமதியைப் பெறு வதற்குத் தேவையானது. ஆனால் போதிய தன்று இதனை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றுள் எது உண்மையானது?

(1) உமக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்திராவிட்டால் உமக்கு (CGT) இற்குக் குறைந்தபட்சப் புள்ளிகள் கிடைக்கவில்லை

(2) உமக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைந்திருந்தால் உமக்கு (CGT) இற்குக் குறைந்தபட்சப் புள்ளிகள் கிடைத்துள்ளன

(3) உமக்கு CGT யிற்கு 100 புள்ளிகள் கிடைத்திருந்தால் நீர் கட்டாயம் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவீர்

(4) நீர் நாட்டில் மிக உயர்ந்த Z புள்ளிகளைப் பெற்றிருந்தால் நீர் கட்டாயம் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவீர்

(5) நீர் CGT இற்கு மிக உயர்ந்த புள்ளியைப் பெற்றிருந்தால் உமது தேசியமட்ட வரிசை நிலை மிக உயர்ந்ததாக இருக்க வேண்டும்.

04) பாலானால் மாலை 5.00 மணிக்கு குறித்த சில நிமிடங்களுக்கு முன்னரான நேரம் பி.ப. 3.00 மணிக்கு அந்த நிமிடங்களில் இரு மடங்கான நிமிடங்களில் பின்னரான நேரத் திற்கு 12 நிமிடங்கள் கூடுதலாகும் எனின் இங்கு பாலானால் குறிப்பிட்ட குறித்த நிமிடம் மாலை 5.00 மணிக்கு முன் எத்தனை நிமிடங்களாகும்?

05) 100m நீளமும் 50m அகலமும் கொண்ட நீள்சதுரக் காணியின் எல்லைகளுக்கு தூண் கள் கொண்டு மதில் அமைப்பதற்கு ஒவ்வொரு மூலையிலும் ஒவ்வொரு தூண் நாட்டப்படு வதுடன் இரண்டு அடுத்தடுத்து வரும் தூண் களுக்கிடையில் 3m இற்கு குறைவான தூரம் இருக்கும் படியும் ஆகக்குறைந்த எத்தனை தூண்கள் தேவைப்படும்?

06) 2 இற்கு சமனாக அமையும் பெறுமானம் யாது?

07) அகலத்தில் இருமடங்கு நீளமுள்ள செவ்வகக் காணி ஒன்றின் பரப்பளவு 64800m2 எனின் அதன் நீளம் யாது?

## அனுப்பவேண்டிய முகவரி

புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

08) நேற்றைய முந்தைய நாளுக்கு முந்திய நாள் சனிக்கிழமை எனின் நாளை மறுதினத்திற்கு அடுத்த நாள் என்ன கிழமை?

09) சதுரமொன்றின் ஒரு பக்க நீளம் 100% இனால் அதிகரிக்கப்பட்டால் அச் சதுரத்தின் பரப்பளவு அதிகரிக்கப்படுவது எத்தனை வீதத்தினாலாகும்?

10) அரைவட்டமொன்றின் விட்டம் 14cm எனின் அதன் சுற்றளவு யாது?

11) 2009 ஆம் ஆண்டு நத்தார்தினம் ஒரு ஞாயிற்றுக்கிழமை எனின் 2012ஆம் ஆண்டில் நத்தார் தினம் வரும் நாள் யாது?

12) எட்டு எண்களின் சராசரி 50 ஆகும். அவற்றில் முதல் ஐந்து எண்களின் சராசரி 50 உம் இறுதி நான்கு எண்களின் சராசரி 60உம் ஆகும். ஐந்தாம் எண் யாது?

13) A,B யிலும் பார்க்க விரைவாகவும் C யிலும் பார்க்க மெதுவாகவும் ஓடுகின்றான். D,A யிலும் பார்க்க விரைவாக ஓடுகின்றார். இத்தகவல்களில் இருந்து பின்வரும் எதனை முடிவு செய்யலாம்

அ) A மிகவும் விரைவாக ஓடுபவராவார்

ஆ) D மிகவும் விரைவாக ஓடுபவராவார்

இ) A இரண்டாவது விரைவாக ஓடுபவராவார்

ஈ) D மூன்றாவது விரைவாக ஓடுபவராவார்

உ) A மூன்றாவது விரைவாக ஓடுபவராவார்

14) கடுகதிப் புகையிரதம் ஒன்று காலை 5 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு மாறாக்கதியில் கண்டிக்கு செல்கின்றது. அதன் பயணத்தில் 1/2 பங்கு முடிவடையும் போது காலை 5.35 மணியும் 3/5 பங்கு முடிவடையும் பொது காலை 6.24 மணியுமாகும். புகையிரதம் கண்டியை எத்தனை மணிக்கு சென்றடையும்?

15) அபர்ணா 12% ஐ ஊழியர் மேலாப நிதிக் கும் 8% ஐ ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் கழிக்கப்பட்ட பின்னர் மிகுதிச் சம்பளமாக ரூ 4000ஐ வீட்டுக்கு எடுத்துச் செல்வராயின் அவரது அடிப்படைச் சம்பளத்தொகை யாது?

16) நாதனினதும் குமரனினதும் மொத்த நிறை 120கி.கி குமரனினதும் ரவியினதும் மொத்த நிறை 110.கி.கி நாதனினதும் ரவியினதும் மொத்த நிறை 90.கி.கி எனின் நாதனினதும், குமரனனினதும் நிறைகளைத் தனித்தனியே காண்க

17) குணாவின் சகோதரி லதா ஆவார். லதா விற்கு சம எண்ணிக்கையான சகோதரர்களும் சகோதரிகளும் உள்ளனர். குணாவிற்கு சகோ தரர்களின் எண்ணிக்கையின் இருமடங்கான சகோதரிகள் உண்டு இக் குடும்பத்தில் ஆண் பிள்ளைகளினதும் பெண் பிள்ளைகளினதும் எண்ணிக்கைகளை தனித்தனியே காண்க

18) நிசார், அமீர், முகமட் என்ற மூன்று பிள்ளை களுடைய வயதுகளின் சராசரி 15 ஆகும். அவர் களின் வயதுகளுக்கிடையே உள்ள விகிதம் முறையே 3:5:7 எனின், நிசாரின் வயது யாது?

19) பொது அறிவுப் பரீட்சையில் சித்தி அடைவ தற்கு அம்ரான் 50% புள்ளிகளைப் பெற வேண் டும். ஆனால் இவர் 50 புள்ளிகளைப் பெற்று 10 புள்ளிகளால் சித்தி அடையவில்லை எனின் இப் பாடத்திற்கான ஆகக்கூடிய புள்ளி என்ன?

20 தொடக்கம் 25வரையான வினாக்கள் பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டவை

- A தொடக்கம் E வரையான ஆங்கில எழுத்துக்கள் அலுவலகமொன்றின் தளங்களை குறிப்பவர்
- பெயர்கள் அலுவலக ஊழியர்களின் பெயர்களை குறிப்பன
- அலுவலக தளங்களில் கடமையாற்றும் ஊழியர் களின் பெயரானது கிடையாகவோ நிலைக்குத் தாகவோ ஒன்றுக்கு மேற்பட்ட தடவை தரப்பட வில்லை

| A | B | C | D | E |
|---|---|---|---|---|
| ரேவதி | ரூபி | ரூபி | வதனா | கலா |
| கலா | வதனா | கலா | ரேவதி | வதனா |
| ரூபி | மலர் | கலா | கலா | கலா |
| ரேவதி | மலர் | வதனா | ரூபி | ரூபி |
| வதனா | கலா | ரேவதி | ரூபி | மலர் |
| வதனா | ரூபி | ரேவதி | வதனா | வதனா |

பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைத் தருக

1. தளம் A யில் பணிபுரியும்அலுவலக ஊழியர் யார்?
2. தளம் B யில் பணிபுரியும் அலுவலக ஊழியர் யார்?
3. தளம் C யில் பணிபுரியும் அலுவலக ஊழியர் யார்?
4. தளம் D யில் பணிபுரியும் அலுவலக ஊழியர் யார்?
5. தளம் E யில் பணிபுரியும் அலுவலக ஊழியர் யார்?

இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.

## சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- ப.பவித்திரா
தரம் :- 08
பாடசாலை:-யா/உடுவில் மகளிர் கல்லூரி

பெயர் :- ம.காருண்யா
தரம் :- 10
பாடசாலை:-யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

பெயர் :- ம.கனகா
தரம் :- 08
பாடசாலை:-யா/கொக்குவில் இந்துக்கல்லூரி

பெயர் :- ம.லவன்
தரம் :- 09
பாடசாலை:-யா/இந்துக்கல்லூரி

பெயர் :- க.தனுசா
தரம் :- 12
பாடசாலை:-யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

பெயர் :- றா.ஜனன்
தரம் :- 10
பாடசாலை:-யா/இந்துக்கல்லூரி

## விண்ணப்பதாரரின் விபரம்

முழுப்பெயர் :- ------------------------
பாடசாலை :- ------------------------
கல்வி கற்கும் தரம் :- ------------------------
வீட்டு முகவரி :- ------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------

## சென்றவார விடைகள்

1.(4) 2.(5) 3.(5) 4. (5) 5. (3) 6. (3)

# ஜனாதிபதித்தேர்தல் 2015 தொகுதி ரீதியான முடிவுகள்

## கொழும்பு மாவட்டம்

### அவிசாவல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 51,351 | 54.12% |
| மைத்திரி | 42,728 | 45.03% |

### பொரளை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 31,469 | 69.97% |
| மகிந்த | 15,148 | 32.24% |

### கொழும்பு மத்தி

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 82,495 | 81.28% |
| மகிந்த | 17,779 | 17.52% |

### தெகிவளை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 30,955 | 65.63% |
| மகிந்த | 15,932 | 33.78% |

### கொழும்பு கிழக்கு

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 35,167 | 67.45% |
| மகிந்த | 16,601 | 31.84% |

### கொழும்பு வடக்கு

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 51,537 | 75.07% |
| மகிந்த | 16,423 | 23.92% |

### கொழும்பு மேற்கு

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 23,915 | 78.99% |
| மகிந்த | 6,164 | 20.36% |

### கொழும்பு

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 56,835 | 58.38% |
| மகிந்த | 39,767 | 40.86% |

### ஹோமகம

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 77,115 | 54.61% |
| மைத்திரி | 63,563 | 44.84% |

### கடுவெல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 70,970 | 50.46% |
| மைத்திரி | 68,886 | 48.98% |

### கஸ்பேவ

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 74,189 | 55.56% |
| மைத்திரி | 61,116 | 4.94% |

### இரத்மலான

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 29,554 | 55.76% |
| மகிந்த | 23,144 | 43.66% |

### கோட்டை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 34,614 | 58.09% |
| மகிந்த | 24,663 | 41.39% |

### மகரகம

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 53,327 | 50.62% |
| மைத்திரி | 51,480 | 48.86% |

### மொரட்டுவ

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 48,599 | 50.63% |
| மகிந்த | 46,885 | 48.85% |

### தபால்மூல வாக்களிப்பு

### கொழும்பு

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 12,856 | 51.19% |
| மைத்திரி | 12,160 | 48.42% |

## அனுராதபுரம் மாவட்டம்

### அனுராதபுரம் கிழக்கு

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 38,947 | 51.49% |
| மைத்திரி | 35,779 | 47.49% |

### அனுராதபுரம் மேற்கு

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 42,347 | 55.03% |
| மைத்திரி | 33,791 | 43.91% |

### ஹொரவப்பொத்தான

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 31,847 | 52.09% |
| மைத்திரி | 27,662 | 45.95% |

### கலவேவ

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 54,008 | 55.92% |
| மைத்திரி | 41,612 | 43.09% |

### மதவாச்சி

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 35,772 | 59.01% |
| மைத்திரி | 24,261 | 40.02% |

### மிகிந்தல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 26,032 | 52.71% |
| மைத்திரி | 22,860 | 46.28% |

### கெக்கிராவ

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 32,563 | 51.96% |
| மைத்திரி | 29,410 | 46.93% |

### தபால் மூல வாக்களிப்பு

### அனுராதபுரம்

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 23,032 | 53.72% |
| மகிந்த | 19,643 | 45.82% |

## திகாமடுல்ல மாவட்டம்

### அம்பாறை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மகிந்த | 76,409 | 69.01% |
| மைத்திரி | 47,658 | 38.11% |

### கல்முனை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 45,411 | 89.81% |
| மகிந்த | 4,683 | 9.26% |

### பொத்துவில்

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 81,547 | 77.55% |
| மகிந்த | 22,425 | 21.33% |


### சம்மாந்துறை

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 46,827 | 84.63% |
| மகிந்த | 7,797 | 14.09% |

### தபால்மூல வாக்களிப்பு

### திகாமடுல்ல

| வேட்பாளர் | கிடைத்த வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| மைத்திரி | 11,917 | 54.89% |
| மகிந்த | 9,713 | 44.74% |



# தேர்தலில் தோல்வியை தழுவினாலும் நாட்டைவிட்டு வெளியேற மாட்டேன்

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தலில் தோல்வியுற்றாலும் நாட்டை விட்டு வெளியேறப் போவதில்லை என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பிற்கு தலைவணங்குவதாகவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்காக வாக்களித்த அனைத்து மக்களுக்கும் நன்றி பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

13 மாவட்டங்களில் கட்சி வெற்றியீட்டியுள்ளதாகவும், 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது கொழும்பு பொலனறுவை மற்றும் கண்டி மாவட்டங்களில் தோல்வியைத் தழுவியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அதிக சனத்தொகையைக் கொண்ட மாவட்டங்கள் மாகாணங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ வெற்றியீட்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஒரு விதமான வகையில் தேர்தலில் வெற்றியீட்டியுள்ளதாக தெரிவித்த பசில் ராஜபக்ச நாட்டின் பௌதீக ஒருமைப்பாடு மற்றும் ஐக்கிய தன்மைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் செயற்பட வேண்டியது அவசியமானது எனவும் தெரிவித்துள்ளார்.

# வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று முழுமையாக வாக்களித்த மக்களுக்கும் வாக்களிக்க அறிவுறுத்தியதோடு, தேர்தல் கடமைகளில் நேர்மையாகவும், சிறப்பாகவும் தொழிற்பட்ட அதிபர்கள் ஆசிரியர்களுக்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நன்றி தெரிவித்துக் கொள்கின்றது.

இதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன்ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ளார்கள்.

# வெளியேறினார் மகிந்த



(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ, நேற்று அதிகாலை அலரி மாளிகையை விட்டுச் செல்வதற்கு முன்னதாக, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தனது வாசஸ்தலத்துக்கு அழைத்து, அந்த கடைசித்தருணங்களில் சகல அதிகாரங்களையும் அவரிடம் முறையாக ஒப்படைத்துவிட்டே அங்கிருந்து வெளியேறியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் நேற்று அதிகாலை அலரிமாளிகையில சந்தித்ததைக் காணலாம்.

# மக்கள் சக்தியால் அரசின் திட்டம் தவிடு பொடியாகியுள்ளது

## ஐ.தே.க.வின் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் சக்திக்கு முன்னால் அரசாங்கத்தின் சகல திட்டங்களும் தவிடு பொடியாகியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.


மக்கள் சக்தி இப்படி எழுச்சி பெற்று எழும் என்று அரசாங்கம் எந்த விதத்திலும் எதிர்ப்பார்த்திருக்காது எனவும் அவர் கூறியுள்ளார்.

இம்முறை தேர்தலிலும் அரச வளங்களை அதிகளவில் பயன்படுத்தி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரின் வெற்றியை உறுதிப்படுத்த அரசாங்கம் முயற்சித்தது.

அதற்காக சில துணிகள், புத்தர் சிலைகள் உட்பட பல பொருட்களை அரசாங்கம் விநியோகித்து மக்களின் நிலைப்பாடுகளை மாற்ற முயற்சித்துடன் அதற்கு அரசாங்கம் அரச ஊடகங்களையும் பயன்படுத்தியது.

ஜனாதிபதித் தேர்தல் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து இறுதி வரை அரசாங்கத்தின் சவால்களை எதிர்கொண்டு தேர்தல்கள் ஆணையாளர் தனது கடமையை அர்ப்பணிப்புடன் மேற்கொண்டதாகவும் கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

# மதுபான போத்தல்களுடன் ஒருவர் நெல்லியடியில் கைது



தேர்தல் விடுமுறை தினத்தன்று யாழ்.நெல்லியடி நகரப்பகுதியில் இருந்து பளைப் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில மதுபான போத்தலகளை கடத்துவதற்கு கொண்டு சென்ற சந்தேகநபர் ஒருவரை நேற்று வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு நெல்லியடி நகர்பகுதியில் வைத்து கைது செய்துள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

தமக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நெல்லியடி நகரப்பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளை மறித்து சோதனையிட்ட போது பளைப் பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் கடத்துவதற்காக கொண்டு சென்ற 31 சாராயப் போத்தல்களும் 10 பீரரின்களும் மீட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

மதுபான போத்தல்களை கடத்துவதற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் சந்தேகநபரையும் கைது செய்ததுடன் நீதிமன்றத்தில் ஆயர்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆட்சி மாற்றத்தேவையை மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர்

## ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

வாக்களிப்பு வீதம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமை நாட்டின் இன்றைய ஆட்சியை மாற்ற வேண்டும் என்ற தேவை மக்களுக்கு இருந்ததை வெளிக்காட்டியுள்ளதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மக்கள் வாக்களிப்பது இந்த தேர்தலில் குறிப்பிடத்தக்களவு உயர்ந்துள்ளது. மக்கள் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக வாக்குகளை பயன்படுத்தியிருக்கலாம்.

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற தேவை மக்களுக்கு இருந்ததை இது தெளிவுப்படுத்தியுள்ளது. வன்முறைச் சம்பவங்கள் தேர்தல் தினத்தில் மாத்திரமல்ல அதற்கு முன்னர் இருந்தே அதிகளவில் இடம் பெற்றன.

தேர்தலுக்கு முதல் நாள் சட்டவிரோதமாக சுவரொட்டி ஒட்டப்பட்டது. அண்மைய கால வரலாற்றில் அரச சொத்துக்கள் அதிகளவில் பயன்படுத்தப்பட்ட தேரதலாக இந்த தேர்தல் காணப்பட்டது எனவும் விஜித ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

# மன்னிப்பு கோருகிறது பொதுபலசேனா

நாட்டு மக்கள் அனைவரிடமும் பொதுபலசேனா மன்னிப்புக் கோரியுள்ளது. ஜனாதிபதி தேர்தலின் முடிவுகளின் படி பொது எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன முன்னிலை வகிக்கின்றார்.

இந்தநிலையில் நாட்டுமக்களைப் பாதிக்கின்ற வகையில் தாங்கள் செயற்பட்டிருந்தால் அதற்காக அனைவரிடமும் மன்னிப்பு கோருகின்றோம் என பகிரங்கமாக அறிவித்துள்ளது. இந்த அறிவித்தலை பொதுபலசேனா தனது ருவிட்டரில் பதிவு செய்துள்ளது. மேலும் சமாதானமான சமூகத்தை உருவாக்க மைத்திரிபால சிறிசேனவிற்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் அதற்கான ஒத்துழைப்புகளையும் வழங்குவோம் எனவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# பதவியை தக்க வைக்க முடியாமலேயே அலரிமாளிகையிலிருந்து மகிந்த வெளியேறினார்


## சிரேஷ்ர ஊடகவியலாளர் ஜவன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஹிந்த ராஜபக்ஷ வியாழக்கிழமை நள்ளிரவு வரை பதவியை தக்கவைக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, முடியாத பட்சத்திலேயே அலரி மாளிகையில் இருந்து வெளியேறியதாக சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.




அவர் அலரி மாளிகையில் இருந்து வெளியேறாமல் இருந்திருந்தால் முழு நாடும் அராஜக நிலைக்குச் சென்று இரத்தக் களரி ஏற்பட்டிருக்கும் எனவும், அவர் மனமாற்றம் அடைந்தது நாட்டை ஒரு அனர்த்தத்தில் இருந்து பாதுகாக்கக் கிடைத்த அதிஷ்டம் எனவும் ஐவன் கூறியுள்ளார்.



**ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது கடைசி அமைச்சரவைக் கூட்டத்தை நேற்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கொழும்பு காலிமுகத் திடலிலுள்ள பழைய நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடத்தினார்.**

(22). வினாக்குறி வந்த இடத்தில் வரும் விடை யாது?



ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பை பெற வேண்டுமானால் எவ்வாறு மடித்து வெட்டும் போது கிடைக்கும்


(23).



(24).



(25) வேறுபட்ட படத்தின் கீழ் கோடிடுக.



**நேற்று பிரசுரமாகிய 'பயிற்சி வினாக்களின் விடைகள்**

(01) 1. பூக்கள் 2.நேசமிலா மனிதர்கள் 3.சிரிக்கின்றன 4.மலர்கள் 5. வாசமிலா மலர்கள் 6. சிரித்தன

(02) 1.கோபம் 2.வாய்மை

(03) 1.இலங்கை எத்தனையாம் ஆண்டு குடியரசு மாறியது? 2.ஆந்தைக்கு இரவில் கண் தெரியுமா?

(04) 1.பண்டைய காலத்தில் வாழ்ந்த மக்கள் காடுகளில் அலைந்து திரிந்தனர் 2.அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்

(05) 1.அவள் 2.நீர் 3. நாங்கள் 4.அவை

(06) 1.மேலெழுந்தவாரியாக படித்தல் 2.பதற்றக்காரன்

(07) 1.இது ஒரு கிளி 2. பாற்சோறு

(08) 1. what is it? 2. class teacher

(09) 1. சத்துவட்ட யமுத 2. ஒவ் மம என்னம்

(10) 1. விலையை குறைக்க முடியுமா?

(11) 1. 2 2. 3 3. 2 4. 1 5. 3 6. 4 7. 4 8. 4 9. 1 10. 2 11. 3 12. 4 13. 3 14. 3 15. 1 16. 2 17. 4 18. 1 19. 3 20. 3

(12) 1. 188190 2. 9999 3. 13 4. 6 3 5. 0.6 6. 75 7. 62.50சதம் 8. 05 9. 9 10. 160km 11. 04,02 12.274 13. 55 14. 2kg 15. 1) 4 2) 8



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I


1.30 மணி

# கல்வி முரசு




ஆரம்பத்தில் தரப்பட்ட இரு அமைப்பையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் அமைப்பு யாது?

(1)



(2)



தரப்பட்ட ஆங்கில எழுத்து ஒழுங்கை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | | G | | | | M |
| | | F | | ✱ | O | N |
| B | | E | | H | | L |
| C | | | ✡ | I | J | |

(3) ✱ இற்கு வரும் எழுத்து யாது?
(I) J (II) K (III) L


(4) ✡ இற்கு வரும் எழுத்து யாது?
(I) E (II) F (III) G

கீழே தரப்பட்ட அமைப்பை அவதானித்து வெட்டி அகற்றப்பட்ட இடத்துக்கு வரும் அமைப்பு எதுவெனக் கண்டு கீறிடுக


(5)



(6)




(7) தரப்பட்ட கணிதச் செய்கையை அவதானித்து விடை தருக





கீழே தரப்பட்ட படஒழுங்கை அவதானித்து அடுத்து வரக்கூடியது எதுவெனக் கண்டு கீறிடுக

(8)



(I) (II) (III) (IV)


(9)



(I) (II) (III) (IV)


வேறுபட்ட அமைப்பின் கீழ் கோடிடுக

(10)



(I) (II) (III) (IV)


(11)



(I) (II) (III) (IV)


புள்ளிக் கோட்டில் வரும் விடையின் கீழ் கோடிடுக

(12)





(I) 100
(II) 80
(III) 50

(13)





(I) 2
(II) 3
(III) 4

(14)





(I) 5
(II) 7
(III) 4

(15)





(I) 5
(II) 7
(III) 4

(16)




(I) 5
(II) 8
(III) 6

(17)




(I) 5
(II) 8
(III) 6

(18)

3 5 7
2 .. 8
5 .. 5

(I) 2, 3 (II) 3, 9 (III) 4, 6


(19)

7 5 6
5 .. 8
2 .. 8

(I) 4, 2 (II) 5, 2 (III) 1, 3


ஆரம்பத்தில் உள்ள உருவை ஒத்த அமைப்பு எது?

(20)




(I) (II) (III)

(21). ஆரம்பத்தில் தரப்பட்ட அமைப்பை C யின் ஊடாக பார்க்கும் போது கிடைக்கும் அமைப்பு யாது?





விசேட வினாத்தாள் I - தரம் 05 - 2015 - கல்விமுரசு


## அஸ்வின் சாதனை



அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட தொடரில் நேற்று சிட்னியில் நடைபெற்ற நான்காம் நாள் ஆட்டத்தில் இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் அரை சதத்தை எடுத்தார் அவர் 46ஆவது ரன்னை தொட்ட போது 1000 ரன்னை எடுத்தார். அத்துடன் 117 விக்கெட்டுகளையும் கைப்பற்றி உள்ளார்.

24 டெஸ்டில் அவர் 100 விக்கெட்டுக்கு மேலும் ஆயிரம் ரன்களையும் எடுத்துள்ளார். இதன் மூலம் அதிவேகத்தில் ஆயிரம் ரன்களை எடுத்து 100 விக்கெட் கைப்பற்றிய 3ஆவது வீரர் என்ற சாதனையை படைத்தார். இயன் போத்தம் (இங்கிலாந்து) 21 டெஸ்டிலும், வினோ மன்காட் (இந்தியா), 23 டெஸ்டிலும் இதை எடுத்திருந்தனர்.

## சமனிலையாகுமா சிட்னி டெஸ்ட்?



(சிட்னி)

அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் போடர்-கவாஸ்கர் கிண்ண டெஸ்ட்தொடரில் சிட்னியில் நடைபெற்றுவரும் இறுதிப்போட்டியில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, அவுஸ்ரேலிய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களை எடுத்ததன் மூலம் 348 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.

நேற்றுமுன்தினம் இந்திய அணி வீரர்களான கோலி 140, சகா 14 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர். நேற்று ஆட்டம் தொடங்கி சற்று நேரத்திலேயே மேலும் 7 ஓட்டங்கள் எடுத்த கோலி ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து சகாவுடன் அஸ்வின் இணைந்து சிறப்பாக விளையாடிய போதிலும், 35 ஓட்டங்களுடன் சகா அவுட்டானார். இதன் பின் புவனேஸ்குமார் இணைந்தார். எனினும் அவர் 30 ஓட்டங்களில் சர்ச்சைக்குரிய முறையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சிறப்பாக விளையாடிய அஸ்வின் அரைச்சதம் அடித்து அசத்தினார்.

இறுதியில் இந்திய அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 475 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் ஸ்ரார்க் 3, ஹரிஸ், லயன், வட்சன் தலா 2, ஹாசில்வூட் 1 விக்கெட்டை கைப்பற்றினர்.

97 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை தொடங்கிய அவுஸ்ரேலிய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது வோனா 4 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

எனினும் ரோஜர்ஸ் 56, சிமித் 71, பேன்ஸ் 66, ஹடின் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களைப் பெற நேற்றைய ஆட்ட நேரமுடிவில் அவுஸ்ரேலிய அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 251 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

பந்துவீச்சில் அஸ்வின் 4, புவனேஸ்குமார், மொகமட்சசி இருவரும் தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

## எச்சரிக்கப்பட்டார் ஆஸிவீரர் ஸ்டார்க்



அவுஸ்திரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீரர்களில் ஒருவர் மிச்சேல் ஸ்டார்க். இவர் சிட்னி டெஸ்டில் முரளிவிஜய் விக்கெட்டை கைப்பற்றினார். "டக்அவுட்" ஆகி வெளியே சென்ற அவரை ஸ்டார்க் தேவையில்லாமல் உசுப்பேற்றினார்.

ஸ்டார்க்கின் இந்த செயல் வீரர்களின் நடத்தை விதியை மீறிய செயலாகும். இதைத் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) அவரை கடுமையாக எச்சரித்துள்ளது. அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதால் எச்சரிக்கையோடு தப்பினார்.

இந்த நிலையில் நேற்றைய ஆட்டத்திலும் ஸ்டார்க் ஒழுங்கீனமாக நடந்து கொண்டார். மதிய உணவு இடைவேளைக்கு சற்று முன்பு அவர் அஸ்வினை பார்த்து தேவையில்லாமல் முணுமுணுத்தார். இதற்கு அஸ்வினும் பதிலடியாக வாக்குவாதம் செய்தார்.

## ஷரபோவாவின் ரசிகருக்கு வந்தது திருமண ஆசை



பிரிஸ்பேன் ஓபன் டென்னிஸ் போட்டியில் ரசிகர் ஒருவர் ரஷியாவின் பிரபல டென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவாவுடன் திருமண நிச்சயதார்த்தம் செய்தார்.

முதல் சுற்றில் கஜகஸ்தானின் யாரோஸ்ல்வாவை 6-0, 6-1 என்ற செட் கணக்கில் வீழ்த்தி ஷரபோவா வெற்றி பெற்றார்.

அப்போது ஷரபோவாவின் மிகப் பெரிய ரசிகரான 29 வயதான டேமியன் டோர்ரி என்பவர் "ஷரபோவா என்னை கல்யாணம் பண்ணிகிறீங்களா?" என்று பேனரை காட்டினார்.

இதற்கு சிரித்துக் கொண்டே சரி பண்ணிக்கிறேன் என்று ரசிகருக்கு அதிர்ச்சி கொடுத்தார் ஷரபோவா.

இது குறித்து டேமியன் டோர்ரி கூறுகையில், அவர் ஆமாம் என்று கூறியதும், நான் கிழே இறங்கி சென்று போஸ்டரில் ஆட்டோ கிராப் வாங்கினேன்.

பின்னர் ஒரு செல்பி எடுக்கலாமா? என்று கேட்டு எடுத்துக் கொண்டேன். அவரை சந்தித்தது அற்புதமான ஒன்று என்று தெரிவித்துள்ளார்.

இந்த செல்பி புகைப்படம் இணையத்தில் பரவலாக பரவி வருகிறது. மேலும் ஷரபோவாவின் காதலர் கிரில்கரின் ருவிட்டர் பக்கத்தில் பலரும் இந்த தகவலை தெரிவித்தபடி உள் ளனர்.

## பாலியல் புகாரில் சிக்கிய பங்களாதேஷ் வீரர் சிறையில்





பாலியல் புகாரில் சிக்கிய, பங்களாதேஷ் உலக கோப்பை அணி வேகப்பந்து வீச்சாளர் ரூபல் ஹொசைன், சிறையில் அடைக்கப்பட்டார்.

பங்களாதேஷ் அணியின் வேகப் பந்து வீச்சாளர் ரூபல் ஹொசைன், 25. 2013ல் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் "ஹாட்ரிக்" விக்கெட் வீழ்த்தினார். வரும் உலக கோப்பை தொடருக்கான அணியிலும் இடம் பெற்றுள்ளார்.

இவர் மீது நஜ்னின் அக்தர், 19, என்ற நடிகை, கடந்த டிசம்பர் 13இல் அளித்த புகாரில், தன்னை திருமணம் செய்து கொள்வதாக தவறான வாக்குறுதி கூறி, பலமுறை மானபங்கம் செய்தார். என்னை ஏமாற்றிய ரூபலை தண்டிக்க வேண்டும் என, தெரிவித்தார்.

இதில் ரூபலுக்கு, கடந்த 15 ஆம் திகதி முதல், 4 வாரத்துக்கு நீதிமன்றின் முன்பிணை வழங்கியது. இதனிடையே இந்த வழக்கை பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான அடக்குமுறைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ததாக "மெட்ரோபாலிட்டன்" நீதிபதி முகமது அன்வர், ரூபல் ஜாமினை இரத்து செய்து சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.

இருவருக்கும் மருத்துவ சோதனை ("டி.என்.ஏ., டெஸ்ட்") நடத்துமாறு தெரிவித்தார்.


வங்கதேசத்தில் இதுபோல ஏமாற்றுவது கிரிமினல் குற்றம் என்பதால், ரூபல் இதிலிருந்து மீண்டு உலக கோப்பை போட்டிகளில் பங்கேற்பது சிக்கலாகியுள்ளது.

ஜன. 24ஆம் திகதி அவுஸ்ரேலியா செல்லும் பங்களாதேஷ் அணியில், இவர் இணைய வேண்டும். இல்லையெனில், மாற்று வீரர் சேர்க்கப்படுவார்.

ரூபல் கூறுகையில், "நஜ்னின் குற்றச்சாட்டுக்கள் தவறானவை அவர், என்னை 'பிளாக் மெயில்' செய்கிறார்," என்றார்.

நஜ்னின் கூறுகையில், "ரூபல் என்னை திருமணம் செய்ய முன் வந்தால், வழக்கை வாபஸ் பெறத் தயாராக உள்ளேன்," என்றார்.

## வாழ்க்கையை படமாக எடுக்க பங்கு கேட்டார் டோனி



கிரிக்கெட் வீரர் டோனியின் வாழ்க்கை விறுவிறுப்புகள் நிறைநதவை. இந்திய அணியின் கப்டனாக இருந்து பல்வேறு வரலாற்று சாதனைகளை நிகழ்த்தினார்.

சமீபத்தில் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இதையடுத்து டோனியின் வாழ்க்கை வரலாற்றைப் படமாக எடுக்க ஏற்பாடுகள் நடக்கிறது. இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் இப்படத்தை எடுக்கின்றனர். இந்த படத்துக்கு "டோனி" என்றே பெயர் வைக்கின்றனர். இதற்காக நடிகர், நடிகை தேர்வு நடக்கிறது. திரைக்கதை உருவாக்கும் பணியும், விறுவிறுப்பாக நடக்கிறது. டோனியும் தனது வாழ்க்கையை படமாக எடுக்க ஒப்புதல் அளித்துள்ளார். இதற்காக கணிசமான தொகை கேட்டாராம். தயாரிப்பு நிறுவனம் ரூ.20.கோடி அளிக்க சம்மதித்து உள்ளது.

அத்துடன் இலாபத்தில் பங்கு தருவதாகவும் உறுதி மொழி அளிக்கப்பட்டு உள்ளது. இதையும் சேர்த்து அவருக்கு ரூ.80 கோடிகள் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவில் யாருக்கும் வாழ்க்கை வரலாற்றை படமாக எடுப்பதற்காக இவ்வளவு பெரிய தொகை கொடுத்தது இல்லை என்று கூறப்படுகிறது. படப்பிடிப்பு அடுத்த மாதம் இறுதியில் தொடங்கும் என எதிரபார்க்கப்படுகிறது.

## உலக கிண்ணத் தொடருக்கான நியூஸிலாந்து அணி அறிவிப்பு


உலக கோப்பை தொடருக்கான நியூசிலாந்து அணியில் நீஷம் சேர்க்கப்படவில்லை. ஒரு ஆண்டாக போட்டிகளில் பங்கேற்காத எலியாட்டுக்கு இடம் கிடைத்தது. அவுஸ்ரேலியா, நியூசிலாந்து மண்ணில் 11 ஆவது ஐ.சி.சி., உலக கோப்பை தொடர், எதிர்வரும் பெப்ரவரி 14 - மார்ச் 29 இல் நடக்கவுள்ளன. இதில் பங்கேற்கும் 15 பேர் கொண்ட நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டது.

இதில் சமீபகாலமாக தொடர்ந்து அணியில் விளையாடி வந்த ஜிம்மி நீஷம் சேர்க்கப்படாதது ஆச்சரியமாக இருந்தது. அதேநேரம் 2013, நவம்பருக்கு பின் போட்டிகளில் பங்கேற்காத எலியாட்டுக்கு வாய்ப்பு கிடைத்தது.

பிரண்டன் மக்கலம் கப்டனாக உள்ள இந்த அணியில், நதன் மெக்கலம், அண்டர்சன், வெட்டோரி, வேகப்பந்துவீச்சாளர் பவுல்ட் ஆகியோர் இடம் பிடித்துள்ளனர். இவர்களுடன் தொடக்க வீரர குப்டில், ரோஸ் டெய்லர், லதாம், வில்லியம்சனும் உள்ளனர். அணி விவரம் பிரண்டன் மக்கலம் (கப்டன்), கோரி அண் டர்சன், பவுல்ட், எலியாட், குப்டில், லதாம். மெக்லீன கன், நதன் மக்கலம், மில்ஸ், மில்னே. ராங்கி, சவுத்தி; ரோஸ் டெய்லர், வெட்டோரி, வல்லியமசன்.

# ராஜீவ் - ஜே.ஆர் ஒப்பந்தப்படி
# 13ஆவது திருத்தம் அமுலாக வேண்டும்

## புதிய ஜனாதிபதிக்கு வெங்கய்யா நாயுடு வேண்டுகோள்



ராஜீவ்காந்தி- ஜெயவர்த்தன ஒப்பந்தத்தில் உள்ள 13ஆவது சட்டத் திருத்தத்தை அமுல்படுத்த இலங்கையின் புதிய ஜனாதிபதி முன்வரவேண்டும் என இந்திய நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் வெங்கய்யா நாயுடு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் வெங்கய்யா நாயுடு செய்தியாளர்களை சந்தித்துப் பேசினார்.

"" ராஜீவ்காந்தி- ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தில் உள்ள 13 ஆவது சட்டத் திருத்தத்தை அமல்படுத்த இலங்கையின் புதிய ஜனாதிபதி முன்வர வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன்.

இலங்கை நமது அண்டை நாடாக உள்ளது. அண்டை நாட்டுடன் இணைந்துதான் நாம் செயலாற்ற முடியும். இலங்கையில் உள்ள தமிழர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும். இது தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தங்களை அமல்படுத்த புதிய அதிபர் மைத்ரிபால சிறிசேன முன்வரவேண்டும் "" என்று வெங்கய்யா நாயுடு தெரிவித்தார்.

# கூண்டோடு பதவிவிலகல் அதிர்ச்சியில் விஜயகாந்த்

தேமுதிக்வில் கட்சி நிர்வாகிகள் பலர் கட்சியை விட்டு விலகுவதாக அறிவித்துள்ளனர்.

தேமுதிக மாநில. செயற்குழு மற்றும் பொதுக்குழு கூட்டம் கோவையில் நேற்று முன்தினம் நடந்தது.

சென்னைக்கு அடுத்ததாக கோவையில் செயற்குழுவை நடத்தியதால் கொங்கு மண்டலத்தின் மீது தேமுதிக தலைமை அதிக கவனம் செலுத்துவதாக, அரசியல் வட்டாரங்களில் பேச்சு எழுந்தது.

அதிமுக பாணியில், விரைவில் கோவையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக நிர்வாகிகள் தகவல் கூறினர்.

ஆனால், கட்சித் தலைமைக்கு அதிர்ச்சி அளிக்கும் வகையில் கோவை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் பலரும், தங்களது பதவிகளை ராஜினாமா செய்திருப்பதோடு, கட்சியை விட்டு விலகுவதாகவும் தலைமைக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

# பத்திரிகை அலுவலகம் தாக்குதல் தீவிரவாதிகள் சுற்றி வளைப்பில்



பிரான்சின் ரர்லி எப்தோ பத்திரிகை ஊழியர்களைக் கொன்றதாக கருதப்படும் இருவரும் பாரிஸுக்கு வடமேற்கே ஒரு பகுதியில் பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சிலரை பணயக் கைதிகளைப் பிடித்துவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாரிசுக்கு வட கிழக்காக 42 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள தம்மார்டின் ஆன் கொயெல் என்ற ஊரின் விளிம்பில் உள்ள ஒரு கட்டடத்தில் இவர்களை பொலிசார் சுற்றி வளைத்ததாக பிரஞ்சு பொலிஸ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சந்தேகநபர்கள் சிலரை அவர்கள் பணயக் கைதிகளாக பிடித்து வைத்திருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


தேடப்பட்டுவந்த இருவருக்கும் பொலிசாருக்கும் இடையே நடந்துவரும் துப்பாக்கிச்சூட்டில் சிலர் காயமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதி நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

தவிர பாரிஸின் சார்ல்-த-கோல் விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் விமானப் தரையிறக்கமோ, விமானம் கிளம்புவதோ ரத்தாகவில்லை.

# அருத்துவரும் 20 நாட்களுக்குள் பல தீவிரவாதிகளுக்கு தூக்கு
## பாகிஸ்தான் பிரதமர் சூளுரை



பாகிஸ்தானில் இன்னும் 20 நாளில் தீவிரவாதிகளை தூக்கில் போடுவோம் என்று பிரதமர் நவாஸ் ஷெரீப் உறுதிபட தெரிவித்துள்ளர். பிரதமர் நவாஸ் ஷெரீப் மனாமாவில் வாழும் பாகிஸ்தானியர்களிடையே பேசும்போது, """பாகிஸ்தானில் தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் உள்ளது. இதனால் அங்கு வாழும் மக்கள் தங்கள் உறவினர்களை இழந்துள்ளனர். மேலும் பலரை இழக்க நேரிடுமோ என்ற அச்சத்தில் உள்ளனர். அவர் களை காப்பது அரசின் கடமை. பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண முடியும் என அரசு நம்பியது.

ஆயுதங்களை கீழே போட்டு விட்டு பேச்சுவார்த்தைக்கு வரும்படி அழைத்தோம். ஆனால், தீவிரவாதிகள் கராச்சி விமான நிலையத்தில் தாக்குதல் நடத்தினார்கள். வாகா எல்லை மற்றும் பெஹாவர் ராணுவ பள்ளி தாக்குதல் என 2 சோகமான சம்பவங்களை பாகிஸ்தான் சமீபத்தில் சந்தித்தது. தீவிரவாதிகளின் தாக்குதலில் 50 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரம் கோடி அமெரிக்க டாலர் சேதம் அடைந்துள்ளது.

அதனால், இனியும் தீவிரவாதிகளை வளரவிடக்கூடா நாட்டின் அமைதியையும், வளர்ச்சியையும் ஏற்பட முடிவு செய்துள்ளோம தீவிரவாதிகளையும், தீவிரவாதத்தையும் ஒழிக்க ராணுவ நீதிமன்றத்தின் உதவி நாட்டப்பட்டுள்ளது. அதன் படி ராணுவ நீதிமன்றத்தில், தீவிரவாதிகள் மீதான வழக்கு விசாரணையை விரைவில் முடித்து தூக்கு தண்டனை அளித்து வருகிறது. இன்னும் 20 நாளில் தீவிரவாதிகள் பலர் தூக்கிலிடப்படுவார்கள்" என்றார்.

உலகச் செய்திகள்

# 26 வருட மணவாழ்வு கசந்தது விவாகரத்திற்கு அதிக பட்ச இழப்பீடு



உலகிலேயே விவாகரத்து வழக்கில் தரப்படும் அதிக பட்ச இழப்பீடு தொகைக்கான செக் அமெரிக்காவின் ஒக்லஹோமா மாகாணத்தில் வைப்பீடு செய்யப்பட்டது. அமெரிக்காவின் வடக்கு டகோட்டா பகுதியில் கான்டி னென்ட்ல் ரிசோர்சஸ் என்ற எண்ணெய் நிறுவனம் உள்ளது.

இதன் தலைமை நிர்வாகி ஹரால்ட் ஹேம். இந்நிறுவனத்தின் 68 சதவீத பங்குகளை இவர் வைத்துள்ளார். இவரது சொத்து மதிப்பு 19 பில்லியன் டாலர் ஆகும்.

இவரது மனைவி சூ ஆன் அர்னால். 26 ஆண்டு திருமண வாழ்க்கைக்குப்பின் இவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதனால் விவாகரத்து பெற முடிவு செய்து வழக்கு தொடர்ந்தனர். அமெரிக்காவின் ஒக்லஹாமா கவுண்டி நீதி மன்றம் இந்த விவாகரத்து வழக்கில் தீர்ப்பளித்தது.

இதில் அர்னாலுக்கு 975 மில்லியன் டாலர் (ரூபாய் 6 ஆயிரத்து 100 கோடி) இழப்பீடு வழங்க உத்தரவிட்டது

இதையடுத்து அர்னாலுக்கு 6 ஆயிரத்து 100 கோடி ரூபாய்க்கான காசோலையை ஹரால்ட் ஹேம் அனுப்பி வைத்தார். உலக வரலாற்றிலேயே விவாகரத்து வழக்கில், இது மிகப்பெரிய இழப்பீட்டு தொகையாக கருதப்பட்டது. இந்த பணத்தை வைத்து வாழ்நாள் முழுவதும் ஒரு பணக்கார வாழ்க்கையை அர்னால் வாழ்ந்திருக்க முடியும். ஆனால் கூடுதல் இழப்பீடு கேட்டு நீதிமன்றத்தில் அப்பீல் செய்ய அர்னாலும், அவரது வக்கீலும் முடிவு எடுத்தனர்.

எனினும் இரு தரப்புக்கும் இடையே நடைபெற்ற சமாதான பேச்சுவார்த்தைக்கு பின், சுமூக முடிவு ஏற்பட்டதாக தெரிகிறது. இதையடுத்து ஒக்லஹாமா சிட்டி பேங்கில் அந்த செக் டெபாசிட் செய்யப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

எனவே அர்னால் இழப்பீடு தொகை குறித்து எதுவும் அப்பீல் செய்யமாட்டாரென்று ஹரால்டின் வழக்கறிஞர் கிரைக் பாக்ஸ் தெரிவித்தார். ஹரால்ட் தனது மனைவி அர்னாலுக்கு இதற்கு முன்பே 20 மில்லியன் டொலர் கொடுத்திருப்பதும், இரண்டு பேரும் வழக்குக்காக மில்லியன் கணக்கில் பணம் செலவு செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# வரலாறு காணாத வகையில் அமெரிக்காவில் பனிப்பொழிவு



அமெரிக்காவின் கிழக்கு மற்றும் மத்திய மேற்கு பகுதிகளில் வரலாறு காணாத பனிப்பொழிவு!

அமெரிக்காவின் கிழக்கு மற்றும் மத்திய மேற்கு பகுதிகளில் வரலாறு காணாத அளவிற்கு கடும் பனிப்பொழிவு நிலவி வருகிறது. இதனால் பள்ளிகள் மூடப்பட்டுள்ளது.

நியூயார்க்கில் உள்ள வாட்டர் டவுன் மற்றும் தெற்கு டகோட்டா பகுதியில் உள்ள சாலைகள் மற்றும் வீட்டு மேற்கூரைகளில் 3 அடி அளவிற்கு பனி படர்ந்துள்ளது. நாட்டில் கடும் குளிர் நிலவும் பகுதியாக எஸ்ட்கோர்ட் ஸ்டே'ன் உள்ளது.

அங்கு வரலாறு காணாத அளவுக்கு வானிலை மோசமடைந்த நிலையில், நேற்று மைனஸ் 39 டிகிரியாக வெப்பநிலை பதிவாகியுள் ளது.

கடும் பனியின் காரணமாக வாகனங்களில் உள்ள பெட்ரோல் உறைந்து போவதால் போர்ட்லேண்ட், சிகாகோவில் உள்ள பள்ளிகள் மூடப்பட்டுள்ளது. மேலும் ரயில் மற்றும் விமானப்போக்குவரத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

# மீண்டும் ஒருமுறை போட்டியிட மாட்டேன்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

மீண்டுமொருமுறை ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடும் எண்ணம் எனக்கு இல்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று மாலை பதவியேற்ற பின்னர் உரையாற்றிய அவர், அனைத்து இனங்கள் மற்றும் மதங்களுடன் உரிமைகள் பேணப்படும் வகையில் இந்த தாய்நாடு அபிவிருத்தி நோக்கி கொண்டு செல்லப்படும்.

என்னை வேட்பாளராகத் தெரிவு செய்த ரணில் விக்ரமசிங்கவுக்கும், ஹெல உறுமய, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட அனைத்து கட்சிகளுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் இந்தத் தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கும் இந்த நடவடிக்கையில், ஊழல் மோசடிகளை ஒழித்து, நாட்டுக்காக பாடுபடும் அரசியல் தலைமைகளை உருவாக்கும் பணிகளில் என்னை ஈடுபடுத்துவேன் என்று உறுதியளிக்கிறேன் எனத் தெரிவித்தார்.

## அமைதியான முறையில் வெற்றியைக் கொண்டாடுங்கள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் 2015 இன் வெற்றியை அமைதியான முறையில் எவருக்கும் பாதிப்பேற்படாத வகையில் கொண்டாடுமாறு தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று தேர்தல்கள் செயலகத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலை எவ்வித பாகுபாடுமின்றி நேர்மையானதும் நீதியானதுமான முறையில் நடத்த உறுதியான முறையில் செயற்பட்ட தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய உட்பட திணைக்கள ஊழியர்களுக்கும் தேர்தல் பணிகளில் ஈடுபட்ட அனைத்து அரச ஊழியர்களுக்கும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதியும் நேர்மையுமான தேர்தலொன்றை நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய இலங்கை பொலிஸார், முப்படையினர் அனைவருக்கும் கௌரவத்துடன் கூடிய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

# சீனாவும் வாழ்த்து

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜனாதிபதி சிறிசேனவுக்கு சீனா வாழ்த்துக்களை தெரிவிக்கின்றது.

சிறிசேனவின் தலைமையின் கீழ் இலங்கை அரசாங்கமும் நாட்டு மக்களும் நாட்டின் அபிவிருத்தியில் புதிய முன்னேற்றத்தை எட்டுவதற்கு வாழ்த்துகிறோம் என்று சீனாவின் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் ஹொங் லேய் கூறியுள்ளார்.

சீனாவும் இலங்கையும் பாரம்பரியமாகவே ஆழமான நட்புறவைக் கொண்டிருக்கின்றன என்றும் கடந்தகால அரசாங்கங்கள் அனைத்தும் சீனாவுடன் நட்புறவான கொள்கையையே கடைப்பிடித்திருக்கின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளும் உறுதியான ஒத்துழைப்பை வெளிப்படுத்தி வந்துள்ளதாகவும் சீன வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் கூறுகின்றார்.

இருதரப்புக்கும் நன்மை தரும் விதத்திலும் இருதரப்பு நம்பிக்கை மற்றும் சமத்துவத்தின் அடிப்படையிலும் இருநாட்டு மக்களின் பொதுவான நன்மைகளின் அடிப்படையிலும் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான செயற்திட்டங்கள் அமைந்துள்ளதாகவும் ஹொங் லேய் தெரிவித்துள்ளார்.

## மோடி...

நண்பன், அயல்நாடு என்ற வகையில் இலங்கையின் சமாதானம், ஒற்றுமை, அபிவிருத்தி, செழிப்புக்கு இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## பதவியேற்றார்...

கொண்டுள்ளார். இதன் போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி தன்னை வெற்றிபெறச் செய்த அனைவருக்கும் நன்றி தெரிவித்ததுடன் தற்போது நாட்டில் நிலவிவரும் அரசியல் கலாசாரத்தை நிலைநிறுத்தி மக்கள் எதிர்பார்க்கும் நல்லதொரு ஆட்சியை அமைப்போம். ஊழல் மோசடிகளை அகற்றி நல்லதொரு ஜனநாயகத்தை நாட்டுமக்கள் அனைவருக்கும் வழங்குவேன் என உறுதியளித்தார்.

## இணைந்து...

நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் வாக்களித்துள்ளதாகவும், ஒவ்வொரு வாக்கும் வெற்றியை பதிவு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சிறந்த முறையில் தங்களது வாக்குரிமையை உறுதி செய்து கொண்ட அனைத்து இலங்கையர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் ஜோன் கெரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் அமைதியான முறையில் சுயாதீனமான தேர்தலை நடத்தி முடித்த தேர்தல் ஆணையாளர், சிவில் சமூகத்தினர் மற்றும் பாதுகாப்பு தரப்பினர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள் என அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அழைப்பு...

பாதையிலிருந்து விலகி வேறு வழியில், நியாயமான தடத்தில் பயணிக்கவேண்டியதன் அவசியத்தை தமது விருப்பமாக நாட்டு மக்கள் தெரியப்படுத்தியிருக்கின்றார்கள். நாட்டு மக்கள் அனைவரும் சமாதானமாகவும், சமத்துவமாகவும் கௌரவமாகவும் வாழ்வதற்கு உகந்த சூழல் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற தமது எதிர்பார்ப்பை அவர்கள் அப்பட்டமாக முன்வைத்திருக்கின்றார்கள்.

தமிழ் மக்களும் தமிழ்ப்பேசும் மக்களும், குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்கள் தங்களுக்கு நீதியும் நியாயமும் கிட்டும் என்று நம்பி இந்தத் தீர்ப்பை அளித்திருக்கின்றார்கள். அதனையே ஒட்டுமொத்தமாக இந்தத் தேர்தல் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்தத் தேர்தல் ஜனநாயக மாண்புகளுக்கு, மக்களின் இறைமைக்குக் கிடைத்த மகத்தான வெற்றி. அந்த ஜனநாயக மாண்பின் வெற்றியில் தங்களுக்கு உள்ள உரிமை- அந்த இறைமையில் தமக்கு உள்ள நியாயமான உரித்து உரிய முறையில் தங்களுக்கும் கிடைக்கப்படும் என தமிழ் மக்கள் நம்புகின்றார்கள் எதிர்பார்க்கின்றார்கள் என்றார் அவர்.

## மக்களின்...

கோரிக்கைக்காக அதிகூடிய ஆதரவை வழங்கி வாக்களித்த எமது மக்களுக்கு முதலில் நாம் நன்றி செலுத்துகின்றோம்.

இதேவேளை, ஆட்சிமாற்றம் ஒன்றின் ஊடாகவே இங்கு எந்தவொரு மாற்றங்களும் நிகழும் என்ற நம்பிக்கையோடு தாமாகவே முன்வந்து வாக்களித்த சகல இன சமூக மக்களின் மன உணர்வுகளுக்கும் நாம் மதிப்பளிக்கின்றோம்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளை எட்டும் எமது இலட்சிய கனவுகளை நடைமுறை யதார்த்த வழியில் தொடரவும், எமது வரலாற்று வாழ்விடங்களை அபிவிருத்தியால் மேலும் தூக்கி நிறுத்தும் பணிகளை நீடித்து செல்லவும், ஆற்ற வேண்டிய செயல்களை ஆட்சிக்கு வந்திருக்கும் புதிய அரசு தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது மக்களின் விருப்பமாகும். இதுவே எமது எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் ஆகும்.

அந்த வகையில் புதிதாக ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், புதிதாக பதவியேற்றிருக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது மக்களுக்கான அரசியல் நிலைப்பாட்டில் நாம் உறுதிமிக்க நம்பிக்கையான சக்திகள் என்பதையே நிரூபித்துக்காட்டி வந்திருக்கின்றோம். எமது அரசியல் வழிமுறையும் அதற்கான நம்பிக்கையும் ஒரு போதும் தோற்காது.

மதிநுட்ப சிந்தனைகளே எமது மக்களின் இலட்சியக்கனவுகளை நிறைவேற்றும் என்ற நம்பிக்கையில் நாம் இனியும் உறுதியுடன் உழைப்போம்.

இதேபோல், நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சக தமிழ் பேசும் அரசியல் கட்சி தலைமைகள் தாம் எடுத்த முடிவை இனியும் வழமைபோல் மாற்றிக்கொள்ளாமல், புதிய அரசோடு அர்த்தமற்ற பகைமையை வளர்க்காமல் நாம் கூறும் மதிநுட்ப சிந்தனை வழியில் எமது மக்களுக்கான சகல உரிமைகளையும் பெற்றெடுக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்திருக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எமது மக்களுக்கான பணிகள் யாவும் உறுதியுடன் தொடரும் என்றும் தெரிவித்துள்ளார்.


## வீதி விபத்தில்...

மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்தில் இருந்து பயணிகளுடன் நேற்று மாலை சுமார் 2.30 மணியளவில் பேருந்து ஒன்று வவுனியா நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்திருக்கின்றது.

குறித்த பேருந்து மன்னார் சாலையில் இருந்து பிரதான பாலம் ஊடாக சென்ற போது பிரதான பாலத்தினை நோக்கி மன்னார் வந்து கொண்டிருந்த ரி.வி.எஸ். சிறிய ரக மோட்டார் சைக்கிள் பேருந்தின் மீது கட்டுப்பாட்டை இழந்து வேகமாக மோதியிருக்கின்றது.

இதன் போது குறித்த மோட்டார் சைக்கிளினை ஓட்டி வந்த குடும்பஸ்தரும், சிறுவனும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருக்கின்றனர்.

உயிரிழந்தவர்களுடன் குறித்த மோட்டார் சைக்கிளில் வருகை தந்த போது காயப்பட்ட மற்றுமொரு சிறுவன் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். குறித்த சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அம்பியுலன்ஸ் வண்டி மூலம் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவரும் இடை வழியில் உயிரிழந்திருப்பதாக பிந்திய தகவல் தெரிவிக்கின்றது.



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நேற்று முற்பகல், எதிர்க்கட்சி அலுவலகத்தில் சந்தித்துக்கொண்டனர். இந்தச் சந்திப்பின் போது...



2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியுற்ற மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி செயலகத்திலிருந்து விடைபெற்றபோது...

# வெற்றிக்கு பின்னால் வட,கிழக்கு வாக்காளர்கள்

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையோரான தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் செறிந்து வாழும் தேர்தல் மாவட்டங்களில் வெற்றியீட்டிய புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பெரும்பான்மைச் சிங்களவர்கள் செறிந்து வாழும் தென்னிலங்கைத் தேர்தல் மாவட்டங்கள் எல்லாவற்றிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தோல்வியுற்றார்.

யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, புத்தளம், மட்டக்களப்பு, திகாமடுல்ல, கண்டி, நுவரெலியா, பதுளை, கொழும்பு, மற்றும் கம்பஹா, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் வெற்றியீட்டிய மைத்திரிபால சிறிசேன, அநுராதபுரம், குருநாகல், மாத்தளை, கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி, மொனராகலை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் மகிந்த ராஜபக்ஷவை விட குறைந்த வாக்குகளையே பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுபான்மைத் தரப்பினரது வாக்குகள் காரணமாகவே மகிந்த ராஜபக்ஷவை விட சுமார் நாலரை இலட்சம் வாக்குகளை அதிகம் பெற்று இந்தத் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவினால் வெற்றியீட்ட முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வட.கிழக்கில் 654,531 மேலதிக வாக்குகள் மைத்திரிக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகையில் மைத்திரியின் வெற்றியை சிறுபான்மையினரே தீர்மானித்திருக்கிறார்கள். விபரம் வருமாறு,

யாழ் - 176,120, வன்னி - 107,040 மட்டகளப்பு-167,811, அம்பாறை-112,333, திருகோணமலை-88,227

# மில்ரோய் பெர்னாண்டோ ஜனாதிபதி மைத்திரியுடன்

(கொழும்பு)

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் சிறுபான்மையோரான தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் செறிந்து வாழும் தேர்தல் மாவட்டங்களில் வெற்றியீட்டிய புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பெரும்பான்மைச் சிங்களவர்கள் செறிந்து வாழும் தென்னிலங்கைத் தேர்தல் மாவட்டங்கள் எல்லாவற்றிலும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தோல்வியுற்றார்.

யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, புத்தளம், மட்டக்களப்பு, திகாமடுல்ல, கண்டி, நுவரெலியா, பதுளை, கொழும்பு, மற்றும் கம்பஹா, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் வெற்றியீட்டிய மைத்திரிபால சிறிசேன, அநுராதபுரம், குருநாகல், மாத்தளை, கேகாலை, களுத்துறை, இரத்தினபுரி, மொனராகலை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் மகிந்த ராஜபக்ஷவை விடக் குறைந்த வாக்குகளையே பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுபான்மைத் தரப்பினரது வாக்குகள் காரணமாகவே மகிந்த ராஜபக்ஷவை விட சுமார் நாலரை இலட்சம் வாக்குகளை அதிகம் பெற்று இந்தத் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவினால் வெற்றியீட்ட முடிந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# பிரித்தானியாவும் வாழ்த்து



(கொழும்பு)

புதிய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவிற்கு பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் பிலிப் ஹமண்ட் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல்களை வெற்றிகரமாக நிறைவுசெய்தமைக்காக இலங்கை மக்களை நான் பாராட்டுகிறேன். மைத்திரிபால சிறிசேனவிற்கு எனது வாழ்த்துக்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கை ஸ்திரமான, வளமான, அனைத்து மக்களினதும் விருப்பங்களை உள்ளடக்கிய, நாடாக வளர்வதற்கான நம்பிக்கையை மீண்டும் புதுப்பித்துக் கொண்டுள்ளது. அமைதியான முறையில் அதிகாரத்தை கைமாற்றிக் கொண்டமைக்காக சகல வேட்பாளர்களும், கட்சிகளும் பாரட்டப்பட வேண்டியவர்கள்.

இதேபோன்று தேர்தல் ஆணையாளர், சிவில் சமூகத்தினரையும் மக்களை தங்களது ஜனநாயக கடமைகளை நிறைவேற்றச் செய்தமைக்காக பாராட்ட வேண்டும். அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான அர்ப்பணிப்பு என்பது எதிர்வரும் நாட்களில் மிக முக்கியமான விடயமாக காணப்படவேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# வடக்கில் மகிழ்ச்சி ஆரவாரம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ளதை வடபகுதி மக்கள் வெடி கொளுத்தி ஆரவாரம் செய்து வரவேற்றுள்ளனர் என்று பி.பி.சி. தனது செய்தியில் வர்ணித்துள்ளது.

யாழ்.நகரில் வர்த்தகர்களும் பல்கலைக்கழக வளாகச் சூழலில் பல்கலைக்கழக மாணவர்களும் பெருமளவிலான வெடிகளைக் கொளுத்தியதனால் அந்தப் பிரதேசமெங்கும் வெடிச்சத்தத்தினால் நீண்ட நேரம் அதிர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் சில பகுதிகளில் பொங்கலிட்டு மக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

வடமாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றதிலும் பார்க்க அதிக அளவிலான திருப்தியை இந்தத் தேர்தல் வெற்றி அங்குள்ள மக்களுக்கு அளித்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.



அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றதும், அதன் பின்னர் எந்தவிதமான பதற்றமுமின்றி அமைதி நிலவுவதும் அங்குள்ள மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

போக்குவரத்துக்கள் குறைவாக இருந்த போதிலும், வீதிகளில் மக்கள் எந்தவிதமான அச்சமும் இடையூறுகளுமின்றி சாதாரணமாக நடமாடுகின்றனர்.

இந்தத் தேர்தலின் மூலம் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றமானது, யுத்தம் முடிவடைந்த பின்பும் தாங்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கொண்டு வரும், கஷ்டங்களை நீக்குவதற்கான சூழல் ஏற்படும் என்று வடபகுதி மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருக்கின்றார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# மத்திய வங்கி ஆளுநர் பதவி விலகல்

(கொழும்பு)

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

புதிய ஜனாதிபதியின் தெரிவின்படி அப்பதவிக்கு பிறிதொருவரை நியமிக்க இடமளிக்கும் வகையில் அவர் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

# டிலான் பெரேரா பதவி விலகல்?

(கொழும்பு)

அமைச்சர் டிலான் பெரேரா தமது அமைச்சுப் பதவியிலிருந்து விலகப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான அறிவிப்பு செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் மூலம் அறிவிக்கப்படும்• என அந்த தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கடந்து வந்த பாதை



(கொழும்பு)

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்றுள்ள பெலவத்த கமராலகே மைத்திரிபால யாப்பா சிறிசேன 1951ஆம் ஆண்டு செப்ரெம்பர் 3ஆம் திகதி பொலன்னறுவையில் விவசாயத்தை பிரதான வாழ் வாதாரமாகக் கொண்ட குடும்பத்தில் பிறந்தார். உள்ளூர் பாட சாலை ஒன்றில் ஆரம்பக் கல்வியை பயின்ற மைத்திரிபால சிறிசேன விவசாயத்துறையில் நாட்டம் இருந்தமையால் 1973 ஆம் ஆண்டில் கண்டி குண்டசாலை விவசாயக் கல்லூரியில், விவசாயப் பாடநெறி ஒன்றைப் பயின்றார்.

அதன் பின்னர் கிராம சேவை உத்தியோகத்தராகவும் சிறிது காலம் அவர் பணியாற்றியிருந்தார். மாணவர் பருவத்திலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளூர் இளைஞர் அணி செயற்பாட்டாளராக இருந்துள்ள மைத்திரிபால சிறிசேன, 1970களின் இறுதியில் அந்தக் கட்சியில் தீவிரமாகச் செயற்படத் தொடங்கினார். இதனால் கட்சியின் பிரதேச அரசியல் குழுக்களில் அங்கம் வகித்தார்.

அதன் பின்னர், 1980களின் தொடக்கத்திலிருந்தே கட்சியின் தேசிய மட்ட அமைப்புகளில் முக்கிய பதவிகளை வகிக்கத் தொடங்கினார். இதில் 1982 ஆம் ஆண்டில் அகில இலங்கை இளைஞர் அணித் தலைவராகவும், பின்னர் கட்சியின் மத்திய குழுவிலும் உறுப்பினரானார். இதனை அடுத்து கட்சி மீது இவருக்கு இருந்த விசுவாச த்தை அடுத்து சுதந்திரக்கட்சி சார்பில் நாடாளுமன்ற தேர்தலில் இறங்கினார் 1989ஆம் ஆண்டு, தனது 38ஆவது வயதில் பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

அதன்பின்னர் நடந்த அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்கு வந்துள்ளார் மைத்திரிபால சிறிசேன. பின்னர், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994 ஆம் ஆண்டில் அமைத்த அரசாங்கத்தில் துணை நீர்ப்பாசனத்துறை அமைச்சராக நியமனம் பெற்ற மைத்திரிபால, மூன்று ஆண்டுகளில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் துணைச் செயலாளராகவும் வளர்ச்சி கண்டார்.

பின்னர், அடுத்த மூன்று ஆண்டுகளில் கட்சியின் துணைத் தலைவராக நியமனம் பெற்ற இவர், 2004ஆம் ஆண்டில் சந்திரிகா தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராகவும் நியமனம் பெற்றார். அதன் பின்னர், முன்னாள் ஜனாதிபதி மகிந்தாவின் தலைமைக் காலத்திலும் அதே பதவி நிலையில் நீடித்துவந்த மைத்திரி பால, விவசாயத்துறை அமைச்சராக பதவி வகித்தார்.

அதன் பின்னர், விவசாயம் சம்பந்தப்பட்ட அரசாங்கத்தின் பல்வேறு அமைப்புகளுக்கு தலைமைதாங்கிய இவர், 4 ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட அமைச்சரவை மாற்றத்தின் படி, சுகாதார அமைச்சராக பதவி ஏற்றார்.

விடுதலைப் புலிகளுடனான போர் உச்சக் கட்டத்தைத் தொட்டிருந்த காலத்தில் 2008 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 9 ஆம் திகதி கொழும்பின் புறநகர்ப் பகுதியான பிலியந்தலையில் பெண்ணொருவரால் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் முயற்சி ஒன்றில் இருந்து மைத்திரி பால சிரிசேன உயிர் தப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்

## நாகமுத்து சிவகுரு

வளலாய் விமான நிலைய வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சிவகுரு நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து சின்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் கணவரும், அமரர் தர்மலிங்கம் (சித்த வைத்தியர்), பிள்ளை நாதன் (ஓய்வுபெற்ற அதிபர், வளலாய் அமெரிக்க மிஷன் வித்தியாலயம்), செல்வநாயகியின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2015) ஞாயிற்றுக்கிழமை 10.00 மணியளவில் சந்நிதி வீதி, தம்பாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
சேரன் (மருகமகன்)

(இ)